# கதிர்வளை

## கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை – 3




50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழகு மங்கையர் ஆசைப்படுவது,
கண்ணைக் கவரும் அற்புதமான வேலைப்பாடு,
அருமையான டிசைன்கள் !!
அசல் 22 கரட் தங்க நகைகள் !!!

S J

அதற்கேற்ப நம்பிக்கை, நாணயமான ஒரே ஸ்தாபனம்

# சது ஜீவலரி

பென்சிப்பொருட்கள், பாடசாலை உபகரணம், அன்பளிப்புப்
பொருட்கள், மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான வீதி, புதுக்குடியிருப்பு - 05, ஆரையம்பதி.
தொ.பே: 065 4923750

# ருபேஷன் மோட்டர்ஸ்

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களுக்குமான MECHANICAL SERVICE & REPAIRING,
BODY WASHING, PAINTING என்பன மிகச்சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

HONDA

# RUBESHAN MOTORS

இங்கு அனைத்து மோட்டார் சைக்கிள்களும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும்

T.P. 0652247800
0776648006

கண்ணகை அம்மன் கோயில் வீதி,
தாழங்குடா-02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவன்

கல்வி இலக்கிய கலை சஞ்சிகை

## கதிர் – 03

ஆசிரியர் : கதிரவன் - த. இன்பராசா

தொடர்பு முகவரி
கதிரவன் கலைக் கழகம்
புதுக்குடியிருப்பு - EP
மட்டக்களப்பு
இலங்கை

தொலைபேசி : 065 4903006
077 4651732

ஆக்கங்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.

உள்ளே........

| | பக்கம் |
|---|---|
| கதிரவன் பேசுகிறேன் | 2 |
| வாழ்த்துகிறேன் இன்று | 3 |
| கைக்குழந்தை | 4 |
| வாழ்விழந்த சிறுவர்கள் | 8 |
| ஆளுமையை விருத்தி செய்வோம் | 9 |
| இறைவனின் படைப்பும் ஆலம்பழமும் | 11 |
| மனம் எனும் மாமருந்து | 12 |
| கங்கா | 15 |
| உலகத்தமிழ் சிற்றிதழ்கள் சங்கம் | 19 |
| இளம் வயசு | 21 |
| நாட்டார் பாடல்களில்.... | 22 |
| சிறுவர் உரிமைகள் | 24 |
| பகிடிவதை | 25 |
| வீதி நாடகம் | 30 |
| பயனில்லாதவை | 33 |
| தெரிந்து கொள்வோம் | 35 |
| கதிரவனின் குறுங்கதைகள் | 36 |
| பாடசாலை வரலாறு | 37 |
| நினைவில் நிற்பவை | 39 |
| வழமான வாழ்வு | 42 |
| புலமைத்தேர்வு | 43 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவன் பேசுகிறேன்

பஞ்சமாபாதகங்கள் தலைவிரித்தாடுகின்றன. மனிதம் மண் அளவும் இல்லாத மனிதர்களாக சமூகம் மாறிச் செல்கின்றது. காட்டிக்கொடுப்பும் துரோகமும் போட்டியிட்டு முந்துகின்றன. இத்தனைக்கும் மத்தியில் நல்லவர்களும் வாழாமல் இல்லை காரணம் மண்ணில் மழை பொழிகின்றது. கண்ணுக்குத் தெரியாத நுண்ணங்கிகளுக்கும் கதி கலங்கி ஓடும் மனிதன் தன்னையறியாது ஆணவக்கூத்தாடுவது ஆறறிவின் பயனா? ஆறாவது அறிவின் பலனா? நவீனத்துவத்தால் உலகையே காலடியில் கொண்டு வந்துள்ளான் மனிதன். அந்த உலகம் தனது சுழற்சியில் மாற்றத்தைக் கொண்டு வந்தால் அவனின் நிலை என்ன? எல்லாவற்றிற்கும் மேலான இறை சக்தியை மறந்து தன் இஷ்டப்படி வாழ்வது முறையல்ல. அற்புதங்கள் அன்றும் இன்றும் நிகழ்ந்திருக்கின்றன ஆண்டவன் நிலைத்திருக்கின்றான்.

பிறப்பின் அர்த்தம் என்ன? பாதகங்கள் இன்றி அன்பு, அறம், வாய்மை, ஒழுக்கம், விருந்தோம்பல் முதலிய நற்பண்புகளுடன் வாழும் போதே சிறப்படைய வேண்டும். இறப்பின் அர்த்தம் என்ன? சமூகத்திற்கு எதை விட்டுச் சென்றோம் என அவர்கள் தட்டிப்பார்க்க வேண்டும். வாழ்க்கை அர்த்தமற்றதாகி விடக்கூடாது. இறந்தும் வாழ்கின்றவர்களை நினைத்துப் பாருங்கள் அவர்களின் வரலாறுகளைச் சுவைத்துப் பருகுங்கள்.

இறைவனின் படைப்பில் ஜாதியினமத பேதமில்லை அதை உருவாக்குபவன் மனிதன். அந்த உருவாக்கத்தால் செத்து சீரழிந்து குட்டிச்சுவராகிப் போவது வேறுயாருமில்லை. இனம் எனும் பெயரால் இனத்தை அழிப்பதோ மதம் எனும் பெயரால் மதம் கொள்வதோ நியாயமற்றது. சகோதர சகோதரிகளே! நீதியின் பாதையில் செல்லுங்கள் அனைத்து உயிர்களையும் உறவுகளாக மதியுங்கள் நாளைய வரலாறு உங்கள் நாமம் சொல்லட்டும். கதிரவனின் அன்பான வேண்டுகோள் இது. நான்காவது இதழில் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வரை.......

- கதிரவன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறேன் இன்று

கல்வி கலை இலக்கியத்தின் சுவையை
சொல்லித் தரும் கதிரவனே வாழ்க!
நல்லதொரு இதழாக ஞாலத்திலே....
நற்பெருமை பறைசாற்றி வளர்க!

ஜாதியின பேதங்கள் இன்றி
யாவருக்கும் சமத்துவமே என்று
நீதி வழி தவறாமல் நின்று
நித்தம் நீ மலர்ந்தாலே நன்று

கதிரவனின் கதிரெங்கும் வீசும்
கருணை கொண்ட உள்ளங்கள் பேசும்
மதியங்கும் மாந்தர் குலம் மகிழ
மனநிறைவாய் கரங்களிலே தவழ

வாழ்விற்காய் படைப்பாக்கம் தந்து
வாசிப்போர் இதயங்களை வென்று
வாழ்வை உயர்த்திடுவாய் என்று
வாயார வாழ்த்துகிறேன் இன்று.

– என். சரோஜினி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைக் குழந்தை

சிறுகதை

- கதிரவன் -

அன்று மேசன் வேலை கிடைக்கவில்லை இருந்தாலும் வளவு துப்பரவு செய்யும் வேலையொன்று சுந்தரை தேடிவந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை அநேகமானோர் விடுமுறையில் வீட்டில் இருக்கும் நாள் ஆனால் சுந்தருக்கோ அன்று வேலை நாள்.

ஒன்றரை நாளில் செய்ய வேண்டிய வேலையினை ஒரே நாளில் அவசரஅவசரமாக செய்து முடித்து விட்டு பேசிய சம்பளத்தைப் பெற்றுக் கொண்டான் சுந்தர். உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைத்ததாக ஒரு மனத்திருப்தி. 'இண்டைக்கு பரவால்ல ஊட்டுக்கு தேவையானத்த... வாங்கித்து போகலாம்.......' நினைத்தபடியே உப்புமுதல் உருளைக்கிழங்கு வரை எல்லாப் பொருட்களையும் வாங்கி வீடு வந்து சேர்த்தான் சுந்தர். மழைத்தூறல் மெதுவாக நனைத்தபடியே இருந்தது நேரம் ஆறு மணியிருக்கும்.

'சாந்தி....! சாந்தி...! இந்தா... எல்லாச்சாமானும்....... வாங்கியிருக்கன்...... ஏதாச்சும் வேணும்மெண்டா சொல்லு......'

வீடு நிஷப்தமாக இருந்தது வாங்கி வந்த பொருட்களை வாசலிலே கிடந்த உரலிலே வைத்துவிட்டு மீண்டும்.

"சாந்தி...! தேத்தண்ணி.... போடு நான் குளிச்சித்து... வாரன்..... அதுக்குள்ள... கணையான் கருவாடும் இருக்கி....."

சுந்தர் உடைகளை மாற்றி வேலைக்குப் போட்ட உடைகளை நீரிலே ஊறவைத்துவிட்டு சவர்க்காரம் எடுப்பதற்காக வீட்டிற்குள் நுழைந்தான். ஆண்மகன் என்று தலைநிமிர்ந்து நடந்தால் வீட்டுக் கூரைக் கம்புகள் தலையில் அடிக்காமல் விடுமா? அடித்தும் வலிக்கவில்லை அங்கு சாந்தியும் இல்லை மகனையும் காணவில்லை.

"சாந்தி..! இன்னும் சத்தமாக "தம்பி...சாந்தி...! பதில் சத்தம் எதுவும் இல்லை தேடுவதற்கு வீட்டிலே அந்த அறையைவிட வேறு இடம் வீட்டு முற்றம் மாத்திரம் தான். அடிக்கடி தொலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதும் தேடி எடுப்பதும் சுந்தருக்கு பழக்கப்பட்ட விடயம் தான் அக்கம்பக்கம் விசாரித்தான் "தெரியாது..." என்ற பதிலே கிடைத்தது. இரவு பன்னிரெண்டு மணிவரைக்கும் எங்கோவெல்லாம் தேடியலைந்தான் பயனொன்றுமில்லை.

பசிக்களை ஒருபக்கம் மனைவி, மகனை காணவில்லை என்ற ஏக்கம் பகல் முழுவதும் வேலை செய்ததால் தூக்கம். கைகளை பிரடியில் வைத்துக் கொண்டு ஒட்டறை படிந்த மோட்டு வளையை பார்த்தவாறு தூங்கினான் சுந்தர். அவனின் கண்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாக வடிந்தோடி யது.

"படிச்சி கிழிச்சித்தான் கிடக்கு... இவரு... உட்டுத்து ஆகப்போற வேலயப்பாரு....."

இளம் வயதிலே கல்வி கற்பதற்குத் தடை மூன்று சகோதரி களுடன் இரண்டு சகோதரன் சுந்தர் நான்காவது பிள்ளை. தகப்பனின் கழுகுப் பார்வை சுந்தரை தனிமையாக்கி விட்டது. வீட்டு வேலைக்கென்றே ஒதுக்கப்பட்டான். நாளாந்தம் அடியும் ஆக்கினையும் குடும்பச் சிறையில் குட்டிச்சுவராகிப் போனான் சுந்தர்.

உறவுகளால் ஓரம்கட்டப்பட் டவன் தனது பதினெட்டாவது வயதிலே விரும்பியோ விரும்பாமலோ காலத்தின் கட்டாய தேவையால் ஒரு தசாப்பதம் உரிமைப் போராட்டத்தில்...... இணைக் கப்பட்டான். உயிர் போகும் வாழ்க்கை யாக இருந்தாலும் வீட்டுச் சுமையை விட சுகமாகவே இருந்தது உறவுகளுக்காக வாழும் வாழ்க்கை.

இத்தனை வருடம் வரை உதிக்காத காதல் இருபத்தெட்டு வயதிலே உருவாகும் என சுந்தர் நினைத்துப் பார்க்கவில்லை சாந்தியின் அழகும் மெல்லிய உடலும் இனிமையான குரலும் சுந்தரை கொள்ளை கொண்டது. காதல் யாரைத்தான் விட்டு வைக்கின்றது.

தற்செயலாக சிறைவாழ்க்கை யினை அனுபவிக்க வேண்டிய நிலை. ஒரு வருடத்திலே சித்திரவதையின் உச்சகட்டத்தை உணர்ந்தான் சுந்தர். தர்மம் தலைகாத்ததோ என்னவோ நீதி தேவன் சுந்தரை விடுவித்துவிட்டான். விடுதலை அடைந்தவன் சாந்தியையும் அழைத்துக் கொண்டு தன் ஊருக்கே வந்துவிட்டான் தன் வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பிக்க.

திருமணத்திற்கு முன்பே திருப்தியடைந்த இரண்டு உள்ளங்களும் அதன் பயனால் சாந்தியின் வயிற்றில் இரண்டு மாதம். சுந்தர் தனது தந்தையின் சிறிய வளவுப் பகுதியொன் றில் தன்னால் இயன்றவு குடிலொன்றை அமைத்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

"சாந்தி....! இஞ்ச வேல... ஒன்றுமே இல்ல... எனக்கு தெரிஞ்ச பொடியனொருவன் விசா அனுப்புவான்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்ச பாருங்கோ! நான் சொல்லுறத முதலிலே கேளு...." வெளிநாடு போனால் பெரிய வீடு. உனக்கு உடம்பெல்லாம் நக."

இவ்வாறாக சாந்தியை சமாதனப்படுத்தி ஊருக்கு வந்து நான்கு மாதங்களிலே வெளிநாடு சென்று விட்டான் சுந்தர். நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி காலம் கடந்தே சென்றது.

"கலோ....கலோ... 2 1/2 பவுணில ஒரு மால வேணும்....." அனுப்பி வைத்தான் சுந்தர். "கலோ... கடன்பட்டாச் சும் ஐம்பதாயிரம் ரூபா வேணும்..."

சாந்தி கேட்பதெல்லாம் சுந்தர் அனுப்பி வைத்தான் மிகுந்த செல்வத்தில் சந்தோஷமாக இருந்தாள். ஆனால் குடில் குடிலாகவே இருந்தது.

இங்கு நடந்ததெல்லாம் சுந்தருக்கு என்ன தெரியும்.....?

இருந்தாலும் சாந்தி அடிக்கடி தனது ஊருக்கு சென்று வருவது சுந்தருக்கு நன்றாகவே தெரியும். பிறந்தது மகன் என்பதை புகைப்படம் மூலம் பார்த்த சுந்தர்." இவ்வளவு வேகமாக மூன்று வருஷம் முடியும் என்று நினைக்கவேயில்லை ஆனால் காலம் கடந்தது தான் மிச்சம்.

"கலோ...சாந்தி! நான் ஒரு வாரத்திலே வந்திடுவன்..." திகைத்தாள் திக்குத்தடுமாறி "கலோ... கலோ..." சாந்திக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

"என்னங்க.... இன்னும் இரண்டு வருஷம்...." "இல்ல சாந்தி கொம்பனி முடிஞ்சி போச்சி......"

என்ன செய்வான் சுந்தர் தனது மனைவியின் சிற்றின்பத்திற்காக இரண்டு வருடம் இருக்கத்தான் ஆசை. ஆனால் ஊருக்கு வந்துதான் ஆக வேண்டும். சுந்தர் ஊருக்கு வந்து ஒரு வாரத்திற்கு பின்பே சாந்தி தனது ஊர் இருந்து வருவதாக கூறி வந்து சேர்ந்தாள். சுந்தர் பிரச்சினைப்பட வில்லை தனது மகனை தூக்குவதும் கொஞ்சுவதுமாக இருந்தான் நேரம் கடந்ததே அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் சாந்தியின் மாற்றங்கள் அவனுக்கு நன்றாக தெரிந்தது. வங்கிக் கணக்கு மீதி வெறுமையாக இருந்தது.

"இவையெல்லாம் எப்படி செலவு செய்தாய்" எனக் கேட்கும் தைரியம் சுந்தருக்கு இருந்தாலும் சாந்தியின் அன்பும் அரவணைப்பும் தடுத்தது. வெளிநாடு இருந்து வந்து ஒருசில நாட்களுக்குள்ளேயே மேசன் கூலியாக இணைந்து விட்டான் சுந்தர்.

ஆலயமணி சத்தமாக ஒலித்தது. சுப்ரபாதம் இசைத்தது. காலைப் பொழுது விடிந்தும் விடியாமலும் கையில் இருந்த எல்லாவற்றையும் தொலைத்து விட்டு பயித்தியகாரனாய் எழுந்து குந்திக் கொண்டிருந்தான் சுந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாரம் வரை பொறுத்திருந் தான் சாந்தியின் வரவிற்காய் பலன் கிடைக்கவில்லை.

"எதுக்கும் ஒருக்கா போய் பாப்போம்....." தன் மனதிலே நினைத்துக் கொண்டு. ஐந்து மணித்தியாலய வாகனப்பிரயாணம் சாந்தியின் ஊருக்கு வந்து சேர்ந்து விட்டான். அது சாந்தியின் அம்மம்மா வின் வீடு அவள் அங்கிருந்து தான் வளர்ந்தவள். சாந்தியின் உடைகள் வாசலிலே காயவிடப்பட்டிருந்தது. சுந்தரின் மனதிலே எல்லையற்ற மகிழ்ச்சி தான் வெளிநாட்டிலிருந்து வாங்கி வந்த உடைகளை அவன் மதிக்காமல் விடுவானா....?

"நம்மட வீடுதானே...உள்ளே போய் சாந்திக்கு அதிர்ச்சியைக் கொடுப்போம்...... என நினைத்தவாறு உள்ளே சென்றான்.

சாந்தியும் கணவனும் கைக்குழந்தையுடன் முத்தமிட்டவாறு..... யாருக்கு அதிர்ச்சி?



"பிச்சை எடுத்தாயினும் பிள்ளைகளை படிக்க வையுங்கள்." மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய நிகழ்வில் கதிரவன் கலைக் கழகத்தினர்.

## சிரிக்கச் சில

காதலன்: தேவதையே! உனக்காக காலமெல்லாம் காத்திருப்பேன்

காதலி :அப்போ... கலியாணம் முடிக்கறல்லையா....?

காதலன் : உயிரே! நீ என்ட புள்ள மாதிரி

காதலி : சீ.... போடா உனக்கு ஏற்கனவே கலியாணம் ஆயிற்றா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்விழந்த சிறுவர்கள்"

- தங்கராசா - இன்பராசா-

வீடுகளில் வீதிகளில் காடுகளில் களனிகளில்
வியர்வை சிந்துகின்ற நாளைய தலைவர்களே!
நாடுகளில் உங்களுக்காய் ஐ.நா வின் சட்டம்
நடு வெயிலில் தொழில்புரிந்து ஏனிந்த வாட்டம்

ஏடுகளில் வரைந்துள்ள சுரைக்காயை சுவைக்கவா?
ஏழை நாம் ஒருவயிற்று பசிக்காக உழைக்கவா?
கேடுகெட்ட உலகினிலே கேட்கும் வரம் இதுதான்
கூடுகளில் அடைபட்ட குருவிகளாய் நாமும்



மேடுபள்ளம் பாகுபாடு பார்ப்பவர்கள் எங்கள்
மேனியிலே சுமையேற்ற மறுக்கவில்லை ஐயா!
ஆடுகின்ற ஆட்டமெல்லாம் அடங்கித்தான் தீரும்
ஆண்டவனின் ஓர் தீர்ப்பு வந்துதான் சேரும்



பாடுபடும் பாலகரின் பசிப்பிணியை தீர்க்க
பதாதைகள் பகிஷ்கரிப்பு பாராட்டுவிழாவும்
ஈடுயிணை இல்லாமல் எடுப்பதினால் இங்கு
இன்றுடனே தீர்ந்திடுமா? எம்மவரின் அடிமை

ஓடுகின்ற பாதங்கள் வலிக்கத்தான் செய்யும்
ஒருபோதும் கிடைக்காது காலுக்குச் செருப்பு
தேடுகிறோம் சட்டத்தை பூட்டிவைத்த திறப்பு
தேசமே! கண்ணுக்கு தெரிவதெல்லாம் கறுப்பு

## சிரிக்கச் சில

காதலன் : அன்பே! உனக்காக நான் உயிரையும் விடுவேன்

காதலி : (மனதிற்குள்) செத்துத் தொலையன் உயிரவிட்டால் அவனோட ஓடிப்போகலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையை விருத்தி செய்வோம்

சதாசிவம் – மதன் – புதுக்குடியிருப்பு.

ஆளுமையானது, எடுத்துக்காட்டான சிந்தனை, உணர்வுகள், மற்றும் நடத்தைகள் மூலம் அபூர்வமான, ஆச்சரியமான சிறந்த ஒரு மனிதனை உருவாக்க உதவுகின்றது. நாம் ஒருவரைப்பார்த்து சிறந்த ஆளுமை மிக்கவர் என்கின்ற போது நாம் கருதுவது அவர்கள் எல்லோரையும் கவரும் படியாகவும், விரும்பும் வகையாகவும் உடைய அவரது நடத்தையே ஆகும். அனைவரும் விரும்புவதும் அதுவேயாகும்.

சிறந்த ஆளுமை மற்றவரைக் கவருவது, உதவிபுரியும் மனப்பான்மை, நம்பிக்கை மட்டுமல்லாது அவரது எடுப்பான தோற்றத்தினாலும் வெளிக்காட்டப்படும். இருப்பினும் தோற்றம் என்பது ஆளுமையின் ஒரு சிறிய பகுதியே. இதே போல் நாம் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் சிறந்த ஓர் ஆளுமையுள்ளவராக மிளிர முடியமானதாக இருக்கும்.

1. பிறர் கதைப்பது எதுவாக இருந்தாலும் முதலில் அதை அமைதியாக இருந்து முற்றாகக் கேட்கும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் கதைப்பவற்றை பிறர் கேட்கக் கூடியதாய் உங்களை மாற்றிக் கொள்ள உதவுவதை நீங்கள் அனுபவம் மூலம் அறிய முடியும்.
2. புதியனவற்றை வாசிப்பதற்கும் அறிவதற்கும் கூடியளவு ஆர்வமுள்ளவராய் இருங்கள். மற்றும் புதிய மனிதர்களையும் அவர்களுடைய சிந்தனைகளையும் அறிய ஆவலாய் இருங்கள். அது நீங்கள் அறியாத பல விடயங்களை அறிந்து கொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் சிறந்த வாய்ப்பாக அமையும்.
3. சிறந்த உரையாடல் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். இது உங்கள் வாசிப்பு மற்றும் அறிவுடன் தொடர்புடையதாக இருக்கும். அனைவரும் எல்லாவற்றையும் அறிந்திருக்க மாட்டார்கள். ஆகவே அனைவருடனும் உரையாடும் திறனால் நாம் வாசித்தறியாத பல விடயங்களை நாம் அறிவதுடன் எம்மிடமிருந்து பிறருக்கும் அறியப்படுத்தலாம். குழுக்களாக இயங்குவது இதனை வளர்த்துக் கொள்ள வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உங்களது விருப்பத்தேர்வுக்கு (Opinion) வாய்ப்பளிக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரவாயில்லை, இருப்பினும் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாது உங்களுடைய கருத்தை அவ்விடத்தில் தெளிவாகக் கூறுங்கள். அது அவ் விடயத்தில் உங்களுக்குள்ளான ஆர்வத்தை வெளிப்படுத்தும்.

5. வேறுபட்ட சமூகத்தவர், வேறுபட்ட செயற்பாடுடையவர்கள் விஷேடமாக உங்களுக்குப் பிடிக்காதவர் என நீங்கள் கருதுபவர்கள் போன்றோருடன் தொடர்பு கொள்வதில் ஆர்வம் காட்டுங்கள். இது உங்களுக்கான பரந்த அறிவைப் பெற்றுத்தரும்.

6. முக்கியமாக நீங்கள், நீங்களாக இருங்கள் உங்களுக்கென ஒரு தனித்துவத்தைப் பேண முயற்சியுங்கள். ஒருவரைப் பார்த்து அதுபோலவே நானும் இருக்க வேண்டும் என்று பிறரைப் பிரதி செய்யாதீர்கள். எனினும் உங்களுக்குத் தெரியாத விடயம் உங்கள் தரத்தில் கீழ் இருப்பவரிடமிருந்தாவது கற்றுக்கொள்ளுங்கள்.

7. நேர் சிந்தனையுடையவராகவும், நேர் நடத்தையுடையவராகவும் (Positive outlook and attitue) இருங்கள். உதாரணமாக ஒரு பாத்திரத்தில் அரைப்பங்கு நீர் இருப்பதை எதிர்மாறாக அரைப்பங்கு வெறுமையான பாத்திரம் என்று கூறுவதை விடுத்து எப்போதும் நிறையை மட்டுமே கருத்தில் கொள்ளுங்கள்.

8. எப்போதும் ஒரே மாதிரியாகவோ அல்லது கோபமாகவோ இராதீர்கள் பிறருடன் நகைச்சுவையாகவும் பிறரை சந்தோஷப்படுத்தும் படியாகவும் நடந்து கொள்வதுடன், பிறரைக் காணுகின்றபோது சிறியதாய் ஒரு புன்னகை புரியுங்கள் இதன் மூலம் மற்றவர்களால் நீங்கள் கவரப்படுவீர்கள்.

9. பிறருக்கு எப்போதும் பக்கபலமாய்ச் செயற்படுங்கள் இது உங்கள் ஆளுமையை வளர்க்க மிக முக்கியமான வழியாகும். மற்றும் ஒருவர் புதிய காரியத்தை செய்யத் தொடங்கும் போது அவரை உற்சாகப்படுத்த மறவாதீர்கள்.


10. இரக்கப்படவேண்டியவர்களை ஏளனம் செய்யாமலிருங்கள். அதேபோல் மதிப்பளிக்க வேண்டியவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள். இல்லாவிடின் மேற்கூறிய அனைத்துமிருந்தும் அவை பயனற்றதாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் படைப்பும் ஆலம் பழமும்

- சி.க. பொன்னம்பலம் -



நடுப் பகல் வேளை
சுடும் வெயில் வருத்த
வழிப்போக்கன் ஒருவன்
நெடுந் தூரம் நடந்தான்!

அவன்,

கிளைகளைப் பரப்பி எங்கும்
நிழலினைக் கொடுத்து நின்ற
விழுதுகள் தாங்கும் ஆல
விருட்சமொன் றங்கே கண்டான்!

"சோர்வினைப் போக்கி நல்ல
சுகத்தினை அடைவோம்" என்று
வாய்க்குள்ளே முணுமுணுத்து
மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டான்.

கட்டியே கொண்டு வந்த
சோற்றினை அவிழ்த்து உண்டு
புட்டியில் வைத் திருந்த
நீரையும் பருகி, பின்னர்........

துண்டினை விரித்துக் கொஞ்சம்
சோர்வினை அகற்றுமாறு
கை தலைக் கீழே வைத்துச்
சரிந்தனன் மரத்தைப் பார்த்து!

செம்மணி போலே ஆலம்
பழமெலாம் சிறிது, சிறிதாய்
அம்மரத் தினிலே அப்பி
வைத்தது போலக் கண்டான்!

கண்டவன், இறைவன் மீது
கடுஞ்சினம் கொண்டு சொன்னான்,
"விண்தொடு விருட்சம் தன்னில்
இத்தனை சிறிய காய்கள்
கொண்டு நீ அலங்கரித்தாய்
கொள்ளுமோ நீதி" என்றான்!

"படைத்திடும் தொழில் உனக்குப்
பொருத்தமே இல்லை, ஐயா!
விடைபெறு இதை விடுத்து" - என
விளம்பியே கண் அயர்ந்தான்.

படுத்தவன் விழிக்கு முன்னர்
படைத்தவன் விளையாட் டொன்று
விடுத்தனன்! என்ன வென்றால்,

ஆல மரத்தில் நின்ற
பழமொன்று பிரிந்து வந்து
கோளமார் வழிப்போக்கன் தன்
கண்ணின் மேல் விழுந்த தன்றோ!

துடித்து அவன் எழுந்து பார்த்தான்
இறைவனின் - சோதனை புரிந்து
கொண்டான்!

"முடிந்தது என் அஞ்ஞானம், ஐயா!
உன்மீது தவறு கண்டேன்!
பொறுத்திடு என் பிழையை!

ஆல்தரு கனியும் பலாவின்
முள்சேர் பெரியதோர் கனிபோலாகில்
என் தலை சிதறி நானும்
இக்கணம் இறந் திருப்பேன்!

"உன் செயல் அறிவார் யாரோ உலகினில்!
என்செயல் பொறுப்பாய்" என்று
இறைவனைப் பணிந்து நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆரையூர் இளவல்-



# 'மனம்' எனும் மாமருந்து

"மனிதனுக்கு இறைவன் அளித்திருக்கின்ற மாபெரும் கொடை மனம் எனும் மாமருந்தாகும்" என்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

இந்த மாமருந்தைத் தன்னகத்தே வைத்துக் கொண்டே மனிதன் சஞ்சலப்படுகின்றான். அந்த மாமருந்தின் மகத்துவம் அறியாமல் அதைப்பயன் படுத்தத் தெரியாமல் துயரப்படுகின்றான்.

"தகவல் மட்டுமே தரும் அறிவியல் பூர்வமாக வாழ்வதையும், தத்துவார்த்தமாக வாழ்வதையும் விட மனப்பூர்வமாக வாழ்வதே சரியான வாழ்க்கையாகும்" என்பது பகவான் ஸ்ரீ சாயிபாபாவின் அருள்வாக்காகும்

மனம் பூரித்து வாழ வேண்டும். மனம் மகிழ வாழ வேண்டும். இந்த மனதிற்கு மகிழ்ச்சியைத் தரவல்ல ஆற்றல் மனதுக்கு மட்டுமே இருக்கின்றது. மனம் மகிழ்ச்சியாக இருந்தால் நம் வாழ்க்கையே மகிழ்ச்சியாக இருக்கும். உலகத்தில் தோன்றும் அனைத்துக் காட்சிகளும் மனதிற்கு மகிழ்ச்சியாகவே தோன்றும்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளின் மொத்த வடிவமான உடம்பில் மனம் தான் இன்ப துன்பங்களை உணர்ந்திருக்கின்றது. "நீ உன் மனதை ஆளுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆளுமைதான் உனக்கு மருந்தாக இருக்கின்றது. வாழ்க்கையும் இனிக்கின்றது. அந்த ஆளுமை தூய அன்பின் அத்திவாரமாக அமைந்திருக்க வேண்டும். அப்போது நீங்கள் அனைவரையும் கடவுளாகப் பார்ப்பீர்கள். அவ்வாறு பார்க்கும் போது மற்றவர்களின் குறை கண்ணுக்குத் தெரியாது பயனில்லாத எண்ணங்களுக்கும் மனம் இடம் கொடுக்காது.

"மனம் அலைபாயும் போது" நான் குரங்கல்ல மனிதன்" என்று திரும்பத் திரும்ப மனதுக்குள் சொல்லிக் கொள்ளுங்கள். அப்போது மனமானது உங்கள் அன்புள்ளத்திற்கு கட்டுப்படும்" என்று பகவான் பாபா அருளியுள்ளார். அனைவரும் மனிதர்களாக வாழ முயற்சிக்க வேண்டும். என்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்களின் ஆசீராகும். "காலம் எந்தக் காயத்தையும் ஆற்றுவது இல்லை அது மனித மனதைப் பக்குவப் படுத்துகின்றது. அந்தப் பக்குவமே மனிதனுக்குச் சிறந்த நல் மருந்தாக அமைகின்றது. இதை வரலாறு மூலம் அறிகின்றோம். என்று மூதறிஞர் ராராஜி கூறியுள்ளார்.

"இதிகாசம்" என்பது, "பழைய வரலாறு" என்றும், இது இப்படி நடந்தது என்றும் கூறுகின்ற உண்மைக் கதை என்றும் கூறப்படுகின்றது. அத்தகைய இதிகாசக் கதைகளில் ஒன்றான மகாபாரதத்தில் இருந்து ஓர் உளம் உருகும் காட்சியை இங்கு தருகின்றோம்.

குருசேத்திரப் போர் கொடூரமாக நடந்து கொண்டிருக்கின்றது. தேர்த் தட்டில் சாய்ந்து கிடக்கின்றான் கர்ணன். தேர்ச் சக்கரம் சகதியில் பரவிக் கிடக்கின்றது. தேரோட்டியாக வந்த சவ்லியன், கர்ணன் தான் சொன்னதைக் கேட்கவில்லையே என்ற கோபத்தில் கர்ணனை தனியாக விட்டு விட்டுப் போய்விட்டான். சக்கரத்தை எடுக்கப் போராடுகின்றான் கர்ணன். முடிய வில்லை. அதே நேரத்தில் அர்ச்சுணனிட மிருந்து மின்னல் கீற்றுக்களாகப் பாய்ந்து வருகின்ற சக்தி வாய்ந்த பாணங்கள் கர்ணனைத் தாக்குகின்றன. ஆனால் எந்தவொரு பாணத்தினாலும் கார்ணனுக்குக் காயம் ஏற்படவில்லை. பார்த்தனுக்கு அது பெரும் அதிசயமாக இருந்தது.

"போரை நிறுத்து அர்ச்சுனா! உன் அம்புகள் அனைத்தும் தீர்ந்து போனாலும் கர்ணன் ஆவியைப் போக்க முடியாது" என்று கூறினார் பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்திருந்த கண்ண பெருமான் பிறகு அவரைக் காணவில்லை. "ஐயோ! தானம் கேட்டு வந்திருக்கின்றேன்" தேர்ச்சக்கரத்தில் சாய்ந்து கிடக்கிற கர்ணன் முன்பாக ஓர் வயோதிபப் பிராமணன் நடுங்கிய உடலுடன் இரு கைகளையும் நீட்டித் தானம் கேட்டுக் கொண்டிருக்கின்றான்.

கர்ணனின் உடலில் இருந்து உதிரம் பெருக்கெடுத்து மண்மீது நதியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அவன் வேதனையினால் துடித்துக் கொண்டிருக்கின்றான். இந்த வேளையில் வேதியரின் குரல் கேட்டு அவன் முகம் மலரச் சிரிக்கின்றான்.

"ஐயா! பெரியவரே! ஆவியோ நிலையின்றிக் கலங்கிக் கொண்டிருக்கி றது. பாவியேன் வேண்டுவார்க்கு வேண்டும் பொருளெல்லாம் வழங்கும் போது வராது இப்போது வந்திருக்கிறீர் களே?" வேதியரைப் பார்த்து வேதனைச் சிரிப்போடு கூறினான் கர்ணன்.

"ஐயா! நீங்கள் எப்போது யார் எது கேட்டாலும் வாரி வழங்கும் வள்ளல் என்று அறிந்தேன். அதனால் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களம் என்றும் பாராமல் தானம் கேட்கின்றேன். தருவீர்களா ஐயா! "வேதியரின் கெஞ்சும் குரல் கேட்டுக் கர்ணனின் வேதனை நெஞ்சம் உருகுகின்றது. கர்ணன் கம்பீரமான குரலில் கூறுகின்றான். "தருகின்றேன், ஐயா! தற்போது என்னிடம் இருப்பதாகக் கேளுங்கள். தருகின்றேன்"

வேதியர் கபடப்புன்னகையுடன் எனக்குப் பொன்னோ மணியோ வேண்டாம். நீ பலமுறை தானம் செய்து புண்ணியம் ஈட்டியவன் அந்தப் புண்ணியங்களையெல்லாம் எனக்குத் தானமாகத் தந்துவிடு" சர்வ சாதாரணமாகக் கேட்டுவிடுகிறான் அந்த வயோதிப் பிராமணன் தானம் செய்வதே புண்ணியங்களைப் பெற வேண்டும் என்ற மன ஆசையால் தான் தானம் செய்து தேடிய புண்ணியங்களையே தானமாகக் கொடுப்பது என்றால் தானம் எதற்காக? அங்கே வேதியர் வேடத்தில் வந்திருப்பவர் கண்ணபிரான் தான் என்பதைக் கர்ணன் உணர்ந்து கொண்டான். "அந்தணரே! நீர் பிரமாவை விடவும் உயர்ந்தவர்" என்று கூறிய கர்ணன் முக்காலங்களையும் மனதில் வைத்துக் கொண்டு "நான் செய்த செய்கின்ற, செய்யப்போகின்ற புண்ணியங்கள் அனைத்தும் பகவானுக்கே அர்ப்பணித்து விட்டான் கர்ணன்.

வேதியர் கர்ணனை அன்பொழுகப் பார்த்து அருள் சிரிப்போடு "உனக்கு வேண்டிய வரங்களைச் சொல்" என்று கர்ணனிடம் உற்சாகமாகக் கேட்டார் கண்ணபிரானனான வேதியர்.

வாங்க வந்தவர் கொடுப்பதாகக் கூறுவது விந்தையிலும் விந்தையல்லவா? அதுவும் ஒரு மானிடனிடம் இறைவனான மகாவிஷ்ணுவே கையேந்தி நிற்பதென்றால். ஆம் கர்ணனுடைய மனதின் மகிமையையறிந்தவர் மகாவிஷ்ணு. அந்த மனதை வாழ்த்தும் தோரணையில்தான் அவர் அவனிடம் கையேந்தி நின்று கொண்டிருக்கின்றார். கர்ணன் தன்முன்னே இறைகாட்சி கண்டு கைகூப்பிக் கேட்கின்றான்" இறைவா! இனிமேல் பிறவி வேண்டாம். இன்னொரு பிறவி உண்டு என்பது விதியானால் அப்போதும் இல்லை என்று சொல்லாது கொடுக்கின்ற 'மனம்' எனக்கு வேண்டும். அருள் செய் இறைவா! என்றான்.

கர்ணன் இறைவனிடம் கொடுப்பதற்குத் தேவையான பணம், பொருள் எதுமே கேட்கவில்லை. எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் மனம் வேண்டும். வேறொன்றும் வேண்டாம். பராபரமே என்று நாட்டிலுள்ள அனைவருக்கும் 'நல் மனம்' வேண்டும். நானிலம் நன்றே வாழ வேண்டும் என்று கர்ணன் இறைவனிடம் வேண்டினான்.

**'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்''**
**- குறள்.294 -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கங்கா

- அன்புமணி -

கங்கா வந்து கொண்டிருக்கின்றாள் அவள் தலையில் மூன்று ஓலைப் பெட்டிகளின் அடுத்த இரு கைகளிலும் பைகள்ஓலைப் பெட்டி களைப் பிடிக்காமலே அனாயாச மாக அவள் நடந்து கொண்டிருந்தாள்.

கன்னங்குடாவிலிருந்து பஸ் ஏறி ஆஸ்பத்திரிசந்தியில் இறங்கி மட்டுநகருக்குள் புகுந்து வியாபாரம் செய்வது அவள் தொழில் இலைக்கறி வகைகள், அரிசிமா, அரிசி முதலியவை தான் அவள் வியாபாரம் அவள் எங்கள் வீட்டுக்கு வந்தாள் "ஐயா, திராய், பொன்னாங்கணி, வல்லாரை எல்லாம் இருக்கு.... எடுங்க" "சரி எடுத்துவை" "அரிசி மா இருக்கு" "அரிசி மா இப்ப தேவையில்லை கங்கா... கிட்டத்தில தானே எடுத்தம்" "அதனாலென்ன, இதையும் எடுத்து வைங்க ஐயா கொஞ்சம் காசி அவசரமாகத் தேவைப்படுகுது" "என்ன அவசரம்" "ரெண்டு பிள்ளையளுக்கும் விளையாட் டுக் காசி கட்ட வேணும். போன கிழமையே ரெண்டும் சொன்னது கள் எங்கும் ஓடிப்பார்த்தன். கிடைக்கல்ல. பள்ளிக்கூடக் காசி கட்டாட்டி, வீட்ட கூட்டிட்டு போ என்னுதுகள் "அவங்க சொல்றது சரிதான் கங்கா"

"எல்லோரும் கையை விரிச்சிட்டாங்க ஐயா நீங்க தான் உதவி செய்ய வேணும்" யோசித்துப் பார்த்தேன். கங்கா ஒரு அன்றாடங்காய்ச்சி. கணவன் குடிகாரன். தொழில் இல்லை. இத்தனைக்கும் மத்தியில் கங்கா, வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி இரண்டு பிள்ளைகளை நகரப் பாடசாலைகளில் சேர்த்திருக்கிறாள். அவர்கள் விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், நான் தான் அவர்களைப் பாடசாலையில் சேர்வதற்கு உதவி செய்தேன். பாடசாலையில் வசதிக் கட்டணம் கட்டாது இழுத்தடிப்பது எத்தனை பெரிய அவமானம் என்பதை எனது பாடசாலைப் பருவத்தில் நான் அனுபவித்திருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன். கங்காவுக்கு எப்படியும் உதவி செய்தே ஆக வேண்டும்.

"கங்கா நான் பணம் தாறன். இப்ப இல்லை பின்னேரம் மார்க்கெட்டிலி ருந்து திரும்பும் போது இங்க வா பணம் தாறன்"

"நீங்க நல்லா இருக்க வேணும் ஐயா. கடவுளைப் போல வந்து காப்பாத்தினீங்க. நான் போயித்து வாறன் ஐயா" கங்கா புறப்பட்டுச் சென்றாள்.

கங்கா ஒரு அபூர்வப் பெண். படுவாங்கரையில் உள்ள ஏழைக் குடும்பங்களின் மத்தியில், தன்னந் தனியாக உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுவதுடன் தன் இரு பிள்ளை களையும் படிப்பிக்கிறாள். மா இடிக்க வேணும் வந்து நகர் புற வீடுகளில் விற்றுக் காசாக்க வேணும் விற்ற பணத்துடன் மார்க்கெட்டுக்குப் போய் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்ப வேண்டும். மழையானாலும் வெயிலா னாலும் அவள் அப்படி இயங்கினால் தான் வீட்டில் உள்ளவர்களுக்குச் சாப்பாடு கிடைக்கும். பெற்றோர், கணவன் வீட்டில் உள்ள பிள்ளைகள் அனைவரும் கங்காவிலேயே தங்கியி ருந்தார்கள்.

கங்கா இத்தனைக்கும் மத்தி யில் பாடசாலையில் படிக்கும் தன் பிள்ளைகளைப் போய்ச் சந்திப்பதிலும் தவறுவதில்லை.

கங்கா தன் வியாபாரத்தை முடித்துக் கொண்டு தன் பிள்ளைகளைப் பார்க்கச் சென்றாள். அம்மாவைக் கண்டதும் தவச்செல்வன் கேட்ட முதற் கேள்வி "என்னகா காசு கொண்டு வந்தயா?"

"எல்லாம் ஏற்பாடு செய்திருக்கன் மகன். பின்னேரம் காசு கிடைக்கும் நாளைக்குப் பணத்தைக் கொண்டு வந்து உன்ரகையில் கொடுப்பன்" தவச் செல்வன் ஒரு உதறல் உதறினான் " நாளைக்கு, நாளைக்கு, நாளைக்கு நெடுக இதே கதைதானா, "எனக்கேலா! எனக்கேலா!" "கோவிச்சுக்காத மகன். காசு பின்னேரம் கிடைக்கும். நாளைக்கு காலமே எப்படியும் கொண்டு வந்து உன்ரகையில கொடுப்பன்"

மகன் கொஞ்சம் சாந்தமான தும், மடிக்குள் இருந்து ஒரு பணிஸ், விரல் பண் ஆகியவற்றை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அவனும் அதை வேண்டா வெறுப்புடன் வாங்கிக் கொண்டான்.

அதன்பின் கங்கா மல்லிகாவி டம் சென்றாள். அங்கும் இதே நாடகம் நடந்தது. எல்லா வேலையும் முடிந்து கங்கா எங்கள் வீட்டுக்கு வரும்போது மாலை 5 மணியாகிவிட்டது. தயாராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த ஐந்நூறு ரூபாவை அவளிடம் கொடுத்தேன். வாயெல்லாம் பல்லாக அதைப்பெற்றுக் கொண்டாள்.

"நான் வாறன் ஐயா. அஞ்சுமணி பஸ்பிடிக்க வேணும் அதைத் தவறவிட்டா, வேற பஸ்ஸே கிடையாது" என்று கூறியபடி அவசரஅவசரமாகப் புறப்பட்டாள் கங்கா. ஓட்டமும் நடையுமாக ஆஸ்பத்திரி சந்திக்குச் சென்றாள். பஸ் ஸ்டாட்டாகி விட்டது. ஓடிச் சென்று அதில் ஏறிக் கொண்டாள்.

கங்கா தன் வீட்டிற்கு வந்தபோது கணவன் வீட்டில் இல்லை. அவள் மனதில் ஒரு திருப்தி வீட்டுக்குள் சென்று ஐநூறு ரூபாவை அடிப்பானையில் ஒளித்து வைத்தாள்.

யந்திரகதியில் இயங்கி சாப்பாடு தயாரித்தாள். சந்தையிலிருந்து கொண்டு வந்த வாழைப்பழத்தை தன் பெற்றோரிடம் கொடுத்தாள்.

இரவுச் சாப்பாட்டை ஆரம்பித்த போது அவள் கணவன் தள்ளாடியபடி வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கும் சேர்த்து சாப்பாடு பரிமாறினாள். எல்லோரும் சாப்பிட்டபின், மிச்சம் மீதியாக இருந்தவற்றை அவள் உண்டாள். எல்லாவற்றையும் ஒதுங்க வைத்து விட்டு அவள் படுக்கைக்குச் சென்ற போது இரவு 10 மணியாகி விட்டது.

நாளை தன் பிள்ளைகள் இருவருக்கும் பணம் கொடுக்கப்போகும் மகிழ்ச்சியில் அவளுக்குத் தூக்கமே வரவில்லை. பொழுது புலர்ந்தது. வீட்டு வேலைகளை வேகமாகச் செய்துவிட்டு வழக்கமான மட்டக்களப்புப் பயணத்திற்கு ஆயத்தமானாள் கங்கா எல்லாவற்றையும் முடித்து விட்டு அடிப்பானையிலிருந்து பணத்தை எடுத்.... பணத்தைக் காணவில்லை. கணவனைக் கூப்பிட்டாள் கணவன் வீட்டில் இல்லை. நிலைதலைந்து போனாள் கங்கா விஷயம் தெரிந்ததும் அவளது பெற்றோர் வழக்கமான அர்ச்சனையைத் தொடங்கினார்கள் அதனால் என்ன பிரயோசனம்? எப்படியும் கணவனைத் தேடிப் பிடித்தேயாக வேண்டும். எப்படித் தேடுவது? எங்கே தேடுவது? சாராயம் விற்கும் இரண்டொரு வீடுகளை கங்காவுக்குத் தெரியும். ஆனால் அங்கே போய் கணவனைத் தேடிப் பிடித்து வாக்குவாதப்பட்டு பலர் முன்னிலையிலும், அவமானப்பட வேண்டுமா? கங்கா அல்லாடிப்போனாள்.

கணவனைத் தேடிப்பிடித்து வருவதாக கங்காவின் தந்தை புறப்பட்டுப்போனார். பல இடங்களிலும் தேடி ஒரு சாராய வீட்டில் அவனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடித்தார் ஆனாலும் அவன் வருவதாக இல்லை.

இருவருக்கும் இடையில் அங்கேயே வாக்குவாதம் ஏற்பட்டது. "பணத்தை தான் எடுக்கவில்லை" யென கணபதி ஒரே பிடியாக நின்றான். "அடே! போக்கத்தவனே! ஒரு பொம்பிள உழச்சிப்போட திண்டு தொலைகிறதுமில் லாமல் அவள் கடனாக வாங்கிவச்ச பணத்தையம் களவெடுத்துப் குடிக்கிற யேடா நாசமாப்போனவனே"

காசை நான் எடுக்கல்ல. வீணா இவடத்தில பிரச்சினையக் கிளப்பாத புறகு மாமனார் எண்டும் பார்க்க மாட்டேன். மரியாதை கெட்டுப்போயிரும்"

"நீ எடுக்காம, வீட்டில இருந்த காசை வேறுயாருடா எடுக்கிற? மரியாதையாக் காசைக் குடுத்திரு. இல்லாட்டி, அவள் புள்ள உயிரோட இருக்கமாட்டாள். செத்துப் போயிருவாள்.

"செத்துத் தொலையட்டும் சனியன்" திடீரென்று கங்கா அங்கே பத்திரகாளியாகத் தோன்றினாள்.

"நான் ஏண்டா சாகவேணும் குடிகார நாயே" என்று கத்தியபடி கங்கா அவன்மேல் பாய்ந்தாள் கணவனுக்கும் மனைவிக்குமிடையே சண்டை என்றால் யார்தான் விலக்குவது? கங்கா அவன் மடியில் கை வைத்து இழுத்தாள். அதற்குள் கங்காவின் தலைமுடியை பிடித்து இழுத்தபடி கணபதி அவளை நையப் புடைத்தான். அவனது வெறித் தனமான அடிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கங்கா மயங்கிச் சாய்ந்தாள். கணபதியின் மடியிலிருந்து பிடுங்கிய ஐநூறு ரூபாய் நோட்டு அவள் கையில் கசங்கிக் கிடந்தது. பள்ளிக்கூடப் பிள்ளைகள் இருவரும், அம்மா பணம் கொண்டு வருவா என எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

**கதிரவன் வளர்ச்சிக்காக நன்கொடை வழங்கிய நலன் விரும்பிகளுக்கு நன்றிகள் - (ஆ.ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தமிழ் சிற்றிதழ்கள் சங்கம்




உலகத் தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தின் இலங்கை சிற்றிதழ்களின் ஒன்றுகூடல் 24.10.2009 சனிக்கிழமை கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காப்பாளர் புரவலர் ஹாசிம் உமர், பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியோர் முன்னிலையில் திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியர் அந்தனி ஜீவா அவர்களின் ஏற்பாட்டில் ஒக்டோபர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலங்கை தமிழ் சிற்றிதழ்களின் வளர்ச்சிப்பரப்பை விரிவுபடுத்தும் இலங்கை சிற்றிதழ்களின் அறிமுகமும் எனும் உயர்நோக்குடன் ஆரம்பித்த ஒன்றுகூடலுக்கு இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இலங்கை சிற்றிதழ்களின் ஆசிரியர்கள் பங்குபற்றியமை சிறப்பம்சமாகும்.

இன் நிகழ்விற்கு திருமதி.மார்க்ரெட் செல்லத்துரை (மலேசிய எழுத்தாளர்) திரு. கண்ணன் (மலேசிய எழுத்தாளர்) திரு. த. சந்திரசேகரன் (உலகத் தமிழ் சிற்றிதழ்கள் சங்கம் - தமிழ்நாடு, இனியநந்தவனம் ஆசிரியர்) ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிய நந்தவனம் அசிரியருக்கு கதிரவன் ஆசிரியர் சஞ்சிகையினை கையளிக்கும் போது எடுக்கப்பட்ட படம்



மலேசிய எழுத்தாளர் திருமதி. மார்க்றெட் செல்லத்துரையிடம் சஞ்சிகை கையளிக்கும் போது எடுக்கப்பட்ட படம்



மலேசிய எழுத்தாளர் தலைநகர். கண்ணன் அவர்களுக்கு சஞ்சிகை கையளிக்கும் போது எடுக்கப்பட்ட படம்.

–என். பிறேம்குமார்–




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் வயசு

-தெருவோர நடிகன்-

சொன்ன வார்த்தை கேட்காமலே
சோக்கா லவ்வும் பண்ணியாச்சி
சின்ன வயதில் மணமுடிச்சி
சின்னவனுக்கு மூன்று புள்ள

பட்டம் விடும் வயதினிலே
பச்சைக் குழந்தை கைகளிலே
தொட்ட புள்ள வயிற்றிலொன்று
தொட்டிலுக்குள் இன்னுமொன்று



எட்டாம் ஆண்டு படிக்கக்குள்ள
எதுக்குத்தம்பி; இந்த லவ்வு
கேட்டவுடன் அப்பன்காரன்
ஓட்டம் போட்ட கவட்டமிது



மூக்கால வழியும் ஒன்று
முதுக கூனி நடக்குதொன்று
கக்காவ அளையுமொன்று
கனசிக்கல் பொடிச்சிக்காமே



வேல தேடும் கவட்டத்தோட
வேளாண்மை வெட்டப்போக
ஏலா எண்டால் புள்ளகுட்டி
ஏரணம் ஏதும் இல்லகுட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்களில் வெளிப்படும் பெண்களின் எதிர்ப்புக்குரல்



ஏ. எல். ஸப்றி

அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுடைய வெளிப்பாட்டு உணர்வு எதிர்ப்புக்குரலாக வெளிப்படும். தங்களுக்கெதிரான பொருந்தாத நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளாமையின் வெளிப்பாடாகவும் எதிர்ப்புக்குரல் அமையும். காலகாலமாக பெண்கள் அடக்கபட்ட ஒரு சமூகமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். இத்தகைய பெண்களின் எதிர்ப்பு உணர்வுகள் நாட்டார் பாடல்களினூடாக சிறப்பாய் வெளிப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையும் (ஒரு சில விதிவிலக்குகள் தவிர) பெண்கள் இலக்கியம் படைப்பதில் நின்றும் ஒதுங்கியே இருந்துள்ளனர் (இதற்கான சமூகக் காரணிகள் பல) எனவே பெண்களின் எதிர்ப்புக்குரலான செம்மையான இலக்கியங்களை விடவும் வாய்மொழி மரபிலான நாட்டார் இலக்கியங்களிலே காண முடிகின்றது.

நாட்டார் இலக்கிய வகைகளில் ஒன்றான நாட்டார் பாடல்களில் பெண்களின் எதிர்ப்புக்குரல் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவளுடைய தாய் தகப்பனார் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட போது திருமணம் முடித்தவன் எந்தவகையிலும் அவளை புரிந்து கொண்டு நடக்கவில்லை. தனக்கு எந்த வகையிலும் பொருத்தமில்லாதவன் என்ற மன உணர்வு அவளது எதிர்ப்புக் குரலாக வெளிப்பட்டுள்ளது.

மாடு கழுவ
வண்டிலுக்குத் தார் அடிக்க
சேனை வெளிசாக்க - வாப்பா
தேர்ந்தெடுத்த மாப்பிளகா

"வகுத்துச் சுமையையும் வீட்டுச் சுமையையும் வெச்சிருக்க ஏலா" பெண்ணை வீட்டுச் சுமையாக கருதி எப்படிப்பட்டவனாயினும் ஒருவனுக்கு திருமணம் முடித்துக் கொடுக்கும் வழக்கம் காணப்பட்டது. இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளுக்கு எதிரான எதிர்ப்புக் குரல்களை பல நாட்டார் பாடல்களில் காணக்கூடியதாக உள்ளது.

காக்கொத்தரிசாம்
கண்ணுமுத்த செத்த மீனாம்
போக்கத்த மீரானுக்கு - இப்ப
பொண்ணுமாகா வேணுமாம்

கண்களிலே ஒன்று பொட்டை
காதும் செவிடாக்கும்
குருத்தெடுத்த வாழை போல - அவர்
கூனி வளைந்திருப்பார்

முப்பத்தி ரெண்டிலேயும்
மூணு பல்லுத்தான் மீதி
காகக் கறுப்பு நிறம் - ஒரு
காலுமல்லோ முடமவர்க்கு

கச்சான் அடித்த மண்
காட்டில் மரம் நின்றது போல்
உச்சியிலே நாலு மயிர் - தலை
ஓரமெல்லாம் தான் வழுக்கை

பெண்களை அடக்கு முறைக்கு உள்ளாக்குதல் எனும்போது பெண்ணே பெண்ணை அடக்க நினைப்பதும் அடங்கும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிரான எதிர்ப்புக் குரலாகவும் நாட்டார் பாடல்கள் உண்டு.

பூமியுந்தான் நல்ல பூமி
எனக்கு வாய்த்த புன்னியனாரும் புத்திசாலி
புன்னயரைப் பெற்றெடுத்த
பெருங்குரங்கே தொந்தரவு

ஒரு மனைவியை வைத்துக் கொண்டு இன்னுமொரு திருமணம் செய்யும் ஆண்களுக்கு எதிரான குரல்களையும் நாட்டார் பாடல்களிடையே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை விட்டு விட்டு
இளைய தாரம் கட்டினையே
போற வழியில் உன்னை
பூநாகம் தீண்டாதோ

தொகுத்து நோக்குகின்ற போது நாட்டார் இலக்கிய வகைகளில் ஒன்றான நாட்டார் பாடல்களில் பெண்களின் எதிர்ப்புக்குரல் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. எழுத்து இலக்கியங்களில் (நவீன இலக்கியங்கள் நீக்கலாக) இவ்வாறான எதிர்ப்புக் குரல்களை காணப்பது அரிது எனலாம்.

***கதிரவன் கல்வி இலக்கிய கலை சஞ்சிகைக்காக சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் கதிரவன் கலைக் கழகத்தின் நன்றிகள் உரித்தக்குக.***

***- கதிரவன்***

# சிறுவர் உரிமைகள்

கொடிய யுத்தம்
கோரச் சுனாமி
அகதி முகாம்

இடை விலகல்
இடம் பெயர்வு
சுட்டெரிக்கும் வீதி
பட்டினி போடும் விதி



வீட்டிலும் இல்லை!
வெளியிலும் இல்லை!
சுவர்களில் தான் எம் உரிமைகள்
சிறுவர்கள் நம் வெறுமையில்

**- த. தயாபரம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடி வதை



க. பரணீதரன்

"கோபி!, கோபி! பஸ்ஸிற்கு நேரம் போயிட்டுது கெதியா வாடா" வீட்டு வாசலில் சுதர்சன் ஒற்றைக்காலில் நின்று அவசரப்பட்டு, கோபியை அழைத்துக் கொண்டு இருந்தான்.

"வாறண்டா, கொஞ்சம் பொறு" உள்ளிருந்து கோபியின் குரல்.

"அம்மா! அண்ணா சாப்பிடாமல் வெளிக்கிடுகிறான். கெதியா சாப்பாட்டைக் கொடுங்கோ!" என்கிறாள் கோபியின் தங்கை உஷா.

பாணும், சம்பலும் என்றால் கோபிக்கு நல்ல விருப்பம். பட பட என்று சாப்பிட்டு விட்டு கோபியின் சைக்கிளில் ஏறி இருவரும் பஸ் தரிப்பிடத்தை அடைந்தனர்.

நேரம் 7.20 ஆகியது. 764ஆம் இலக்க பஸ் வந்து நின்றது. உள்ளே சன நெரிசல். அதில் அதிகம் கம்பஸ் மாணவர்கள் தான் பயணம் செய்வர். இந்த பஸ், "கம்பஸ்" இற்கு முன்னால் மாணவர்களை கொண்டு சென்று விடும். அந்த பஸ்ஸை "மிஸ்" பண்ணினால் 9 மணிக்கு உள்ள விரிவுரைக்கு மாணவர்களால் செல்ல முடியாது.

சுதர்சனும், கோபியும் பஸ்ஸில் ஏறிக்கொண்டனர். கோபியை கண்ட ஏனைய மாணவர்கள் சிலர் அவனை ஒரு விதமாக பார்த்து கதைத்து கொண்டு இருந்தார்கள்.

மூன்று மாதத்தின் பின்னர் கோபி இன்று "கம்பஸ்" சென்று கொண்டு இருக்கின்றான்.

கோபியின் குடும்பம் மிகவும் வறுமைப்பட்ட ஏழ்மையான குடும்பம். கோபிக்கு ஒன்பது வயதாக இருக்கும் பொழுது தகப்பன் கடலில் தொழிலுக்கு இரவு சென்றவர் சென்றவர்தான். மூன்று நாளின் பின் தலையில் குண்டு துளைத்த காயத்துடன் சடலமாக கரை ஒதுங்கி னார். தகப்பன் சாகும் வரை உஷாவிற்கு ஒரு வயதுகூட ஆக வில்லை. வீட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவன் கோபி அவன் தலையில் அச்சிறிய வயதிலேயே குடும்ப சுமை.

தகப்பனின் சாவு கோபியின் குடும்பத்தை நன்கே பாதித்தது. பணத்திற்கு வழியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டனர். 9 வயதிலேயே இரவு கடல் தொழிலுக்கும், காலையில் பாடசாலைக்கும் சென்று படித்தான். கோபிக்கு ஓய்வு என்பதே கிடையாது. நட்டாற்றில் நின்ற அவனது தாயையும், தங்கையும் தன் சிறிய உழைப்பால் காப்பாற்றி கொண்டு இருந்தான். கோபி கடவுள் பக்தி நிறைந்தவன். எவ்வளவோ கஷ்டங்கள் வந்த போதும் நிலை குலையாதவன். நியாயத்தின் பக்கம் என்றும் நிற்பவன். பாடசாலையில் கற்கும் காலத்தில் அவன்பட்ட துன்பங்களுக்கு அளவே இல்லை. ஆனாலும் படிப்பிலும் கவனம் கொண்டு படித்தான். "ரியுசனுக்கு" அவன் போனது கிடையாது. பாடசாலைகளில் கற்பிக்கப் படும் பாடங்களை திரும்பி வீட்டில் படிக்க அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. பாடசாலையில் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை நன்கு கிரகித்து உள்வாங்கிக் கொள்வான். தகப்பன் இறந்த பின் அவன் குடும்பம் எந்த பண்டிகையை கூட கொண்டாடியது இல்லை. அவர்கள் வாழ்வு இருண்ட வாழ்வாகவே காணப்பட்து.

இவை அனைத்திற்கும் விடிவு கிடைத்தது போல கோபியின் A/L பெறுபேறு அமைந்தது. கலைப்பிரிவில் கற்க தகுதி பெற்றான். அவனது தாயும் தங்கையும் தங்களுக்கு விடிவு வந்துவிட்டதை எண்ணி குதூகலித்த னர்.

கோபி இயல்பிலேயே மிகவும் பொறுமைசாலி எதையும் சிந்தித்து, எல்லோரையும் மதித்து நடப்பவன். அநியாயத்திற்கு துணை போகாதவன். ஏழ்மையில் வளர்ந்த அவனுக்கு 'வஞ்சகம்' என்றால் என்ன எனத் தெரியாது.

கோபிக்கு கம்பஸ் கிடைத்து விட்டது என்பதை அறிந்த உடனே அவனது பிரதேசத்தில் படிக்கும் சிரேஷ்ட மாணவர்கள் அவனை வந்து தங்களை சந்திக்க சொல்லும் படி சொன்னார்கள்.

கோபிக்கு "கம்பஸ்" நடை முறைகள் எதுவும் தெரியாது. அவன் 'ஜீன்ஸ்' உடனும், ரீ - சேட் உடனும், சவரம் வழிக்காத முகத்துடன் அவர்கள் வரச் சொன்ன இடத்திற்கு சென்றான். அங்கு ஏழு சிரேஷ்ட மாணவர்கள் ஒரு மரத்திற்குக் கீழ் இருந்தார்கள். நான்கு பேர் சவரம் வழித்து, முழுக்கை 'சேட்' போட்டு சேட்டை ஜீன்ஸிற்கு உள் விட்டு கை கட்டிய படி பயத்துடன் நின்றனர். அவர்கள் அருகில் சென்றதும் அவர்களை கோபி இனம் கண்டு கொண்டான். அந்த நால்வரும் தன்னைப்போல் புதுமுக மாணவர்கள் என்பதனை. கோபியைக் கண்டதும் சிரேஷ்ட மாணவர்களுக்கு ஆத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. "டேய் இங்கை வாடா" என அழைத்தனர். அவர்களிற்கு முன்னால் சென்று நின்றான். "கையைக் கட்டுடா" என்றான் ஒருவன். கோபி கையைக் கட்டி அடக்கமாக நின்றான்.

"உதென்னடா உடுப்பு" எனக் கேட்டவாறு கோபியின் கன்னத்தில் 'சளார், சளார்' என ஒருவன் அறைந்தான். இன்னொருவன் கோபி யின் பிடரியில் இரண்டு, மூன்று தடவை அடித்தான். இன்னொருவன் கோபியின் சேட்டை இழுத்து கழற்றினான்.

கோபி இவ்வாறுதான் 'ராக்கிங்' நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. "டேய் உனக்குப் பெரிய திமிராம். நீ என்ன பெரிய ஆளா! உனக்கு 'சீனியர்ஸ்' உடன் எப்படி நடக்க வேண்டும் என்று தெரியாதா? முட்டி போட்டு இதிலை இருடா! அமைதியாக பயந்தவாறு வீங்கிய முகத்துடன் இருக்கிறான் கோபி.

முட்டுக்காலில் இருந்த கோபிக்கு அடிகள் பல விழுந்தன. கெட்ட வார்த்தைகளால் திட்டு விழுந்தது. இவ்வாறாக பகிடி வதை என்ற பெயரில் வதை தொடர்ந்தது.

"நாங்கள் எங்கை வரச் சொன்னாலும் வரவேணும் சரியா. போங்கடா சைக்கிளை எடுத்துக் கொண்டு. ஒருத்தரும் சைக்கிளை ஓட்டிக் கொண்டு செல்லக்கூடாது. எல்லாரும் வீடுவரை உருட்டிக் கொண்டு போங்கடா. கோபி நீ உதைபடுவாய் கவனமாய் இரு" என்று கூறிக் கொண்டு தங்கள் மோட்டர் வண்டிகளில் ஏறி 'சீனியர்' மாணவர்கள் சென்றனர்.

இவ்வாறாக வதைகள் தொடர்ந்தன. 'கம்பஸ்' தொடங்க எல்லாம் குறைந்து விடும் என்றவாறு அனைத்தை யும் பொறுத்துப் போனான். மற்றவர்களுக்கும் இவ்வாறு தானே நடக்கிறது என்பதை நினைத்து தன்னைத் தேற்றிக் கொண்டான் கோபி. A/L பெறுபேறுகள் வந்து எட்டு மாதங்களின் பின்னர் பல்கலைக்கழகம் தொடங்கியது.

'கம்பஸ்' தொடங்கிய முதல் நாள் அனைத்து முதல் வருட மாணவர்களுக் கும் 'கம்பஸ்' இன் Auditorium இல் அறிமுக நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து 'சீனியர்' மாணவர்களும், 'ஜீனியர்' மாணவர் களும் தங்களை அறிமுகம் செய்து கொள்வார்கள். இது வழமையாக நடந்து வருவது. இந்நிகழ்வு ஒரு அறிமுக நிகழ்வு என்பதை வெளியில் உள்ள அனைவரது கருத்தாகக் காணப்பட்டது. ஆனால் உள்ளே பகிடிவதை என்ற பெயரில் புதுமுக மாணவர்களுக்கு செய்யப்படும் வதைகளை நினைக்க 'கம்பஸ்' இல் படிக்க எவருக்கும் விருப்பம் வராது.

கோபி சரியாக காலை 9 மணிக்கு கம்பஸ் சென்று அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவேந்தர், பேராசிரியர்கள் மாணவர்களின் பாடத்தெரிவு ஒழுக்கம் என்பவற்றை பற்றி உரையாற்றினார்கள். அதன் பின்னர் அறிமுக நிகழ்வுகள் ஆரம்பமானது.

புதுமுக மாணவர்களை மேடையில் ஏற்றி ஆட வைத்தார்கள். ஆட மறுத்தவர்களை மேடைக்கு பின்னால் அழைத்து சென்று, தும்புத்தடி, கை, கொட்டான் என்பவற்றால் அடித்து மேடைக்கு கொண்டு வந்து ஆட வைத்தனர்.

ஒரு பெண்ணின் அரை நிர்வாணப் படத்தை காட்டி அதனை விமர்சனம் செய்யும்படி புதுமுக மாணவர்களை கேட்டனர். 'கள்'ளுப் பருக்கினார்கள். 'கம்பஸ்' 'கள்ளு' எல்லோரும் குடிக்க வேணும் என்று கூறி ஆண் மாணவர்களுக்கு 'கள்ளு' பருக்கினார்கள். பெண் பிள்ளைகளை அழைத்து அவர்களது உடலின் 'சைஸ்' என்ன இடுப்பு 'சைஸ்' என்ன... ஏனைய உடைகளின் 'சைஸ்' என்ன என ஆபாசமாக கேட்டு துன்புறுத்தினர். பல பெண்பிள்ளைகள் அழுதார்கள்.

தூசணங்களை திருக்குறள், வெண்பா, பாட்டாக மேடையில் ஏறி மாற்றி படிக்கச் சொல்லி துன்புறுத்தினார்கள். இவ்வாறு முதற்கிழமை பகிடிவதை தொடர்ந்தது. இதில் இருந்து கோபியால் தப்பிக் கொள்ள முடியவில்லை. 'கம்பஸ்' செல்வது என்றால் நரகத்திற்கு செல்வது போலவே கோபி உணர்ந்து கொண்டான். மிகவும் மனது நொந்து கொண்டான். அவனால் படிக்கக் கூட முடியவில்லை.

'கம்பஸ்' தொடங்கி ஒன்றரை மாதம் ஆகியும் பகிடிவதை குறைந்த பாடில்லை. துன்புறுத்தல் கூடிக் கொண்டே சென்றது. ஒருநாள் கோபி விரிவுரைக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்தான். கம்பஸ் வாசலில் இருந்த 'பென்ஜீல்' இருந்த மாணவர்கள் அவனை அழைத்தனர்.

கோபி அவர்கள் அருகில் சென்று நின்றான். "என்னடா உனக்கு சூப்பர் தங்கைச்சி இருக்காம். எனக்கு 'செற்' பண்ணி தாறியாடா!" என்றான் ஒருவன்.

கோபிக்கு கோபம் தலைக்கேறியது. ஆனாலும் அவன் அவற்றை அடக்கி கொண்டு அமைதியாக நின்றான்.

'என்னடா செம்மறி பேசாமல் நிற்கிறாய்' என்றவாறு அவனுக்கு அடித்தார்கள்.

"டேய், மச்சான் அந்த 'பியர்' போட்டலை எடு இவன் குடிக்கட்டும்' என்றவாறு 'பியர்' போத்தலை திறந்து கோபிக்கு பியர் பருக்கினார்கள். கோபி அவற்றைக் கொப்பளித்தான். அவனை அடித்து வாயில் பியரினை ஊற்றினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேற்று உன்னை பத்தாயிரத்து எட்டு தடவை தூசணம் எழுதிக் கொண்டு வரச் சொன்னனான். கொண்டு வந்தனியே' என்றான் ஒருவன். 'மன்னிச்சு கொள்ளுங்கண்ணா. எனக்கு கெட்ட வார்த்தை பேசிப் பழக்கமில்லை" என்றான் கோபி.

கோபியை கெட்ட கெட்ட தூசணங்களால் அழைத்தபடி, "டேய் நாய் பெத்த மகனே" இங்கை நாங்கள் வைக்கிறது தான் சட்டம். நீ கேக்கணும், தூஷணம் பேசணும்" எனக்கூறி 'பியரினைப்பருக்கினார்கள்' கோபி அவர்களின் வதைகளால் மயக்கம் அடைந்தான். அவனை 'பென்ஜில்' கிடத்தி விட்டு அவர்கள் சென்றார்கள். கண்முழித்து பார்த்த போது கோபி வீட்டில் இருந்தான். கோபி உள ரீதியாக பாதிப்படைந்தான். தன்னளவில் பிதற்றினான். 'கம்பஸ்' செல்ல மறுத்தான். பித்துப் படித்தவன் போல நின்றான்.

தாய் என்ன சொல்லியும் அவனை வழிப்படுத்த முடியவில்லை. நண்பன் சுதர்ஷனின் ஆலோசனைப்படி கோபியை உள ஆற்றுப்படுத்தல் நிறுவனத்திற்கு அழைத்தச் சென்று கோபியை உள ஆற்றுப்படுத்தலுக்கு உட்படுத்தினார்கள். அவன் குணமானான். இன்று மூன்று மாத உள ஆற்றுப்படுத்தலின் பின் கோபி 'கம்பஸ்' சென்று கொண்டு இருக்கிறான்.

'கம்பஸ்' வந்தது. கோபி 'கம்பஸ்' வாசலில் இறங்கினான். அங்கு நின்ற சிரேஷ்ட மாணவர்கள் அவனை அழைத்தார்கள். சிலர் தூசணங்களை கூறி கூப்பிட்டார்கள். ஆனால் அவன் ஒன்றிற்கும் செவிசாய்க்காமல் நிமிர்ந்த நடையுடன் கையில் புத்தகத்துடன் கல்வி என்னும் இலக்கை அடைவதற்காக உறுதியுடன் சென்று கொண்டு இருக்கிறான்.



கதிரவன் பாலர் பாடசாலை சிறுவர் தின நிகழ்வு - 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி நாடகம் கதிரவன் கலைக்கழகம்

– த. கோபாலகிருஷ்ணன்–

28.04.1976ம் ஆண்டு கலைசார் தாபனமாக திரு. எஸ். தங்கராசா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கதிரவன் கலைக்கழகம் இன்றுவரை தனக்கென ஓர் இடத்தினை தக்கவைத்துள்ளது.


இலங்கை திருநாட்டில் பல்வேறு பிரதேசங்களில் கலை உலா வந்து கொண்டிருக்கும் "கதிரவன்" வீதிநாடகத்துறையில் சிறப்பாக திகழ்கின்றமை வியக்கத்தக்க விடயமாகும்.

ஒரு கருத்தினை மக்கள் மத்தியில் மிகவும் இலகுவான முறையில் உட்புகுத்தி விழிப்படையவைக்கும் திறன் வீதி நாடகத்திற்கு உள்ளது. நகைச்சுவையாகவும் எளிய மொழிநடையுடனும் பாமர மக்களுக்கும் தெளிவாக விளங்கும் வகையில் எடுத்துக் கொண்ட கருப்பொருளினை சிறப்பாக விளக்கவும், விளங்கிக் கொள்ள வைக்கவும் தெருவோர நாடகங்கள் மிகப்பொருத்தமானவை என்பது நாங்கள் உணர்ந்த உண்மை.

தற்போதைய நவீன காலத்திலே சுகாதாரம் பற்றியோ சிறுவர்களின் உரிமைகள் பற்றியோ ஒரு மணிநேரம் வரை பேசினாலும் சமூகம் அதன் பூரண அறிவினையும் தெளிவினையும் பெற்றுக்கொள்ள முடியாது. பாத்திரப்படைப்புடன் சுகாதார சீர்கேட்டினால் சீரழியும் குடும்பத்தை அக்குடும்பத்தின் அவஸ்தையினை வீதிநாடகம் மூலம் வெளிக்காட்டினால் சமூகம் விழிப்படையும். மக்கள் வாழ்க்கை சிறப்படையும். இதனைப் புரிந்து கொண்டே கதிரவனின் வீதி நாடகப் பயணம் தொடர்ந்து பல்வேறு கிராமங்களில் நடந்தது. மக்களுடைய வாழ்கையினை மக்களே மாற்றியமைத்து செம்மைப்படுத்துவதற்கான திட்டம் "நெக்டெப்" திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தங்கிவாழும் மனோநிலையில்லாமல் சுயமாக முன்னேற்றம் காண வைக்கும் இத்திட்டத்தில் "விழிப்புணர்வு" எனும் பதம் முக்கியத்துவம் வாய்ந்தது.

பால்நிலை சமத்துவம், சுற்றாடலைப் பேணல் சுகாதார பழக்கவழக்கங்கள், சிக்கனவாழ்க்கை, சமூக அபிவிருத்தி ஆகிய கருப்பொருள்களை மையமாக வைத்து "விழிப்புணர்வு வீதி நாடகம்" தயாரித்து நடிக்கும் பொறுப்பு வாய்ந்த கடமை கதிரவனிடம் மட்டக்களப்பு நெக்டெப்பினால் ஒப்படைக்கப்பட்டது. மக்கள் எவ்விடயத்தில் விழிப்பின்றி இருக்கின்றார்களோ அவ்விடயத்தினை விழிப்படைய வைக்கும் கருவியாக வீதி நாடகம் அமைந்தது. எனவே இத்திட்டத்தினை கதிரவன் செயற்படுத்த துணிந்து வெற்றிகண்டமை யாவரும் அறிந்த விடயம்.

ஆலயங்கள், மைதானங்கள், பாடசாலைகள், வீதியோரங்கள், மரநிழல்கள் என பல்வேறு இடங்களில் பல்சுவையுடன் அதிகமான பார்வையாளர்கள் மத்தியில் வீதி நாடகங்களை பார்வையிட்டஅரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பல தங்கள் திட்டத்திற்கு அமைவாகவோ அல்லது திட்டத்தினை மாற்றியமைத்தோ வீதி நாடகத்தின் ஊடாக சமூதாய மக்களை விழிப்படைய வைக்க முன் வந்தனர்.

அதன் அடிப்படையில் IUCN நிறுவனத்தோடு இணைந்து இயற்கை வளங்களை பாதுகாத்தல், பெண்களுக்கெதிரான வன்முறை எனும் பொருளில் அம்பாறை மாவட்டத்தில் 12 கிராமங்களில் மிகவும் சிறப்பாக வீதிநாடகம் வெற்றிகண்டது. அம்பாறையில் எமது வீதி நாடகத்தினை பார்வையிட்ட நெக்டெப் (அம்பாறை மாவட்டம்) உத்தியோகத்தர்கள் அங்கும் எமது கலைப்பயணத்தை ஆரம்பிக்க வழிவகுத்தனர். இன்னும் விட்டபாடில்லை. திருகோணமலை மாவட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்டெப் திட்ட விழிப்புணர்வு வீதி நாடகத்தினையும் எமது கதிரவன் கலை கழகத்தினரே நிகழ்த்தி வீர நடை போட்டனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் வாழ்கின்ற மக்கள் மீளக்குடியமர்த்தப்படும் வேளையில் "மிதிவெடி" யில் சிக்குண்டு. மரணமடைவதை கால்கைகள் இழப்பதை வீதிநாடகமாக தயாரித்து நடித்து "அக்டட்" நிறுவனத்தின் நலன்புரி முகாம்கள் மீதுள்ள ஒருவகை அக்கறையினை செயற்படுத்தினோம்.
வேள்ட்விஷன் நிறுவனத்தின் சுகாதார மேம்பாட்டு திட்டத்திற்காக வாகரைப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் "பொதுச்சுகாதாரம்" எனும் தலைப்பிலான வீதி நாடகம் வெற்றிகண்டமையை தொடர்ந்து மீண்டும் அதே இடங்களில் "இளவயது திருமணம்" எனும் கருப்பொருளில் மாணவர்களை நெறிப்படுத்தும் நாடகம் நடிக்கப்பட்டது.

"திண்மக்கழிவு முகாமைத்துவம்" எனும் மையப் பொருளில் 'சுவிஸ் கொண்டக்ட்', 'ஓவர்சீஸ்' ஆகிய நிறுவனங்களுக்காக பல்வேறு இடங்களில் வீதி நாடகம் நிகழ்த்தப்பட்டது. இன்னும் பல நிறுவனங்களோடும் அரச திணைக்களங்களோடும் இணைந்து HIV எயிட்ஸ், ஆட்கொல்லி டெங்கு, சமாதான சகவாழ்வு, புகைத்தல்கேடு, சிறுவர்களே நாளைய உலகம் எனும் பலவகையான கருத்துக்களுடன் வீதி நாடகம் செயற்திறனுடன் நடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 150க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 1012 வீதி நாடகங்கள் நிகழ்த்தி கதிரவன் கலைக்கழகம் சிறந்து விளக்குகின்றமை பாராட்டிற்கும், சாதனைக்குரிய விடயம்தான் என நினைக்கின்றேன்.

## சிரிக்கச் சில

காதலன் : அன்பே! உனக்காக பூச்செண்டு வாங்கியிருக்கேன்

காதலி : அட.... பூசணிக்காய் தலையா! ஒரு வனிஸ் வாங்கி வந்திருக்கலாமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மூனாக்கானா-

# பயனில்லாதவை

காய்ச்சலுக்கு தலைவலிக்கு உதவாத பனடோல்
களவாகப் பார்ப்பதற்கு உதவாத புளுபிலிம்
கூச்சலிடத் தெரியாத ஊர்வலத்துத் தோழர்
குறட்டைவிட முடியாத குமாஸ்தாக்கள் கந்தோர்
பேச்சோடு சேட்டைவிடா காதலர்கள் பூங்கா
பெரியவர்கள் வைபோகில் முடித்த கலியாணம்
ஏச்சிலுக்கு பயந்துவிடும் சமூகநலத் தொண்டன்
எள்ளளவும் பயனில்லை இதை அறிகுவீரே

கோடுகளில் வாதாடி வெற்றி பெறா லோயர்ஸ்
குரலினிமை இல்லாத பாடகியின் பாடல்
வீடுகளில் சத்தமிடா ரேடியோ ரீவி
வெயிலுக்கு உதவாத குடையோடு செருப்பு
நாடுகளில் நடக்கின்ற அடக்குமுறைச் சட்டம்
நல்லவர்கள் மனம் நோக நடக்கின்ற சமூகம்
ஏடுகளில் மறைமுகமாய் எழுதுகின்ற மந்திரம்
எவருக்கும் எப்போதும் உதவாது கண்ணீர்

காலையிலே குடிப்பதற்கு கிடைக்காத கோப்பி
கவலைகளை மறைப்பதற்கு உதவாத மப்பு
மாலையிலே வீச்சுகளிலே உலவாத கால்கள்
மனைவியொடு ஒருசின்ன வீடில்லா வாழ்க்கை
சாலைகளில் வன்செயலை தூண்டாத ஹர்த்தால்
சம்பளநாள் மனைவியோடு பிடியாத சண்டை
வேலைதரகர் கைநீட்டி வாங்காத பந்தம்
வீணாகப் போகுமென அறிந்திடுவாய் தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமது இல்லாத பருந்துக்கிளிக் குடும்பம்
பயந்தவனை அடிக்கின்ற சண்டியனின் வீரம்
பூசுதற்கு உதவாத டையோடு கண்மை
புலம்புவதற்கு உதவாத பேச்சாளர் மேடை
நேசம்போல் பாசாங்கு காட்டிவரும் ஆட்கள்
நினைத்தவுடன் வராத சி.ரி.வி. பஸ்கள்
பேசுவதற்கு உதவாத டெலிபோனும் மைக்கும்
பெருங்கவலை தருகின்ற விசயமிது காண்பீர்

அவசரத்துக் குதவாத சைக்கிளொடு நல்ல
அல்லயல்கள் இல்லாத பெண்வாழும் வீடு
சிரசில்முடி இல்லாத வாலிபனின் கோலம்
செவ்வாயில் புதுமனையில் உண்ணுகின்ற உணவு
மருமகளை அடிக்காத மாமியார் கைகள்
மாங்காயை விரும்பாத மனையாளின் போக்கு
தருமம்மா என்றவுடன் மறைகின்ற வீட்டோ
சகம்மீது வாழ்வதற்கு பொருத்தமில்லை காண்பீர்.

**நன்றி- கவிதை நெஞ்சம்**

## சிரிக்கச் சில



காதலன் :தேவதையே! கவிதைகளால்
உன் அழகை ரசித்து
எழுதியிருக்கன்
காதலி : பார்த்தேன் அதில நான் "பேசியல்"
செய்த விடயம் வரல்லே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

-த.யுவராசா-

- மீன்களில் சுமார் 1500 வகைகள் உள்ளன.
- திமிங்கிலத்தின் வாயில் நரம்புகளே இல்லை.
- பாம்புகளும் மீன்களும் கண்களை திறந்து கொண்டே தூங்கும்.
- மனித உடம்பில் உள்ள முதுகெலும்புத் தொடரின் நீளம் சுமார் 60 முதல் 70 Cm
- நம் கால் பாதங்களில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை 14
- மனித மூளைதான் ஆயுட்காலத்தில் பத்துக்கோடி செய்திகளை சேமித்து வைக்கும் திறன் கொண்டது.
- குரங்குகள் மற்றைய பிராணிகளை விட அதிகமான மூளை வளர்ச்சி கொண்டவை.
- சூரிய குடும்பத்தில் மிகவும் அழகான கோள் - சனி
- கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சுற்றும் கோள் - வெள்ளி
- உலகிலே மிகவும் நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது.

எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களிடமிருந்து தகுதியான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன மற்றும் வர்த்தக விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர், கதிரவன்
புதுக்குடியிருப்பு - E.P
மட்டக்களப்பு,
இலங்கை.

**கல்வி, இலக்கிய, கலை சம்மந்தமான சமகால நிகழ்வுகளின் புகைப்படங்களையும் விளக்கங்களையும் அனுப்பி வையுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவனின் குறுங்கதைகள்

## வேடிக்கையான சிறுவன்

ஒரு சிறுவன் தெருவால் ஓடிவந்தான். அவ்வழியில் வந்த தாத்தா "என்னப்பா ஓடுறியா....?" எனக்கேட்க அச்சிறுவன் ஓடிக்கொண்டே "இல்லமகனே! சாப்பிடுறன்....." எனப்பதில் கொடுத்தான். ஆத்திரமுற்ற தாத்தா "காலம் வரட்டும்" என சிறுவனை எதிர்பார்த்திருந்தார். ஒருநாள் தாத்தா மாங்கன்று ஒன்றினை நாட்டிக் கொண்டு இருக்கையில் சிறுவன் வந்தான். "என்ன தாத்தா! மாங்கன்று புடுங்கிறயலா...? எனக் கேட்க தாத்தா வேகமாகவும் விவேகமாகவும் "இல்லடா பேரா! நாட்டுரன்..." எனச் சரியாக பதில் கொடுத்தார். " தாத்தா! இந்தக்காலத்துப் பசங்கள ஏமாத்தேலா...." என கூறி சிறுவன் சிரித்தான்.

## ஏமாற்றம்

"21 வயதுடைய அழகான பெண்ணுக்கு மணமகன் தேவை" எனும் விளம்பரத்தை பார்வையிட்ட சிவா அந்தப் பெண்ணை தேடி வந்து தரகர் ஊடாக சீதனம் எல்லாம் பெற்று மிகச் சிறப்பாக திருமணம் நடந்தது. ஆனால் அன்று இரவோடு இரவாக சிவா ஓடி விட்டான். மணமகனை காணாத மணப்பெண் தனது பெற்றோரிடம் முறையிட்டாள்

"மகளே! அழகுராணி அழவேண்டாம் அப்பா நானிருக்கன் அந்த வடுவாவ எப்படியாவது தேடிப்புடிச்சி ஒன்ட கையில தருவன்..." எனக் கூறிக் கொண்டு சிவாவைத் தேடி தகப்பனும் மகளுமாக பல கஸ்டத்திற்கு மத்தியில் சிவாவின் வீட்டைக் கண்டு பிடித்தார்கள்

"சிவா.... அத்தான்..... சிவாத்தான்...!

"ஆரது....? ஆரப்பார்க்க வந்திருக்கையல்...." 18 வயது மதிக்கத்தக்க இளைஞன் கேள்வி கேட்டவாறு வெளியே வந்தான். உடனே அந்தப் பெண் "சிவா... நிக்காங்களா...? எனக் கேட்க "அப்புச்சி... அப்புச்சி...." என அழைத்துக் கொண்டு இளைஞன் உள்ளே சென்றான். "சிவா வெளியே வந்தார் கிழப்பிராமணர் தோற்றத்தில் இருந்தாலும், அந்த இளந்தாரி மேக்காப்பில் 61 வயது சிவா எவ்வளவோ அழகாய் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழங்குடா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வரலாறு

1919 ஆண்டு பிரான்ஸ் தேசத்திலிருந்து இங்கு சமயப்பணிக்காக வருகை தந்திருந்த றோமன் கத்தோலிக்க மதகுருவான வணபிதா எமில்ஹொப்பனோ அடிகளார் அவர்களால் தாழங்குடா பிரதான வீதியிலிருந்து மண்முனைத் துறையை நோக்கிக் செல்லும் ஊர் வீதியில் 500 மீற்றரளவு தூரத்தில் உள்ள றோ.க.மிசன் காணியில் 1924ம் ஆண்டு ஓலைக் குடிசையாக இருபத்தொரு மாணவர்களுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு மிசனரிப் பாடசாலையாக இயங்கி வந்த இப்பாடசாலையின் முதல் அதிபர் திரு.கே.வைத்தியலிங்கம் அவர்களாவார். கடந்த 1957ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது இப்பாடசாலை முற்றாகச் சேதமுற்றது. இக்காலப்பகுதியில் தாழங்குடாக் கிராமத்தில் உள்ள புனித ஸ்நாபக அருளப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தையாக இருந்த அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த வணபிதா.எவ்.எல். கிளாக்சன் அடிகளார் அவர்களால் 1958ம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு கட்டிடம் (தற்போதும் இருக்கின்றது) றோ.க.மிஷன் பாடசாலையாக பாலர் வகுப்பு தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரை நடைபெற்று வந்தது. அக்காலப் பகுதியில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் குறைவாகக் காணப்பட்டதனால் இங்கு சமயப்பணிகளில் ஈடுபட்டு வந்த குருவானவர் அவர்கள் தனது சொந்த வாகனத்தில் ஆரையம்பதி, நாவற்குடா போன்ற பகுதியிலிருந்த மாணவர்களை இங்கு கொண்டு வந்து பாடசாலை முடிந்த பின்னர் அம்மாணவர்களை தங்கள் வீடுகளுக்கு கொண்டு செல்வதும் வழக்கமாக இருந்தது.

அக்காலப் பகுதியில் நாவற்குடாவிலிருந்து இப்படியாக இங்கு வந்து கல்வி கற்ற மாணவர்களில் ஒருவராக தற்போது மனித உரிமைகள் அலுவலராகக் கடமைபுரியும் இரா. மனோகரன் அவர்களையும், ஆரையம்பதிப் பகுதியிலிருந்து இங்குவந்து கல்வி கற்ற மாணவர்களில் பலர் இப்போது ஆசிரியர்களாகவும் இன்னும் பலர் பல உத்தியோகங்களையும் வகிக்கின்றனர். தற்போது கிழக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் திரு.மா. செல்வராஜா அவர்களும் இப்பாடசாலையின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

றோமன் கத்தோலிக்க மிஷனால் நடாத்தப்பட்டு வந்த இப்பாடசாலை கடந்த 1960ம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்டுத் தற்போது இரு கட்டடங்களுடன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையாக இயங்கி வருகின்றது. இற்றைவரை இருபது அதிபர்கள் இப்பாடசாலையில் கடமை புரிந்திருக்கின்றார்கள். தற்போது அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இதே கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட திரு.க. தங்கராசா அவர்களின் காலத்திலே இப்பாடசாலை கல்வியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது என்று கூறினால் மிகையாகாது. இவர் அதிபராகக் கடமையாற்றுவதற்கு முன்னர் 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் எவரும் சித்தி பெறவில்லை. கடந்த 1991ம் ஆண்டு அவர் பாடசாலையைப் பாரமெடுத்து தனது அயராத முயற்சியினாலும் ஆசிரியர்களினாலும் செயற்பாட்டினாலும் 1995ம் ஆண்டு முதன்முறையாக ஒரு மாணவர் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது சட்டக்கல்லூரியில் பயின்று கொண்டிருக்கின்றார்.

மேலும் இவரது காலப்பகுதியில் 2000ம் ஆண்டு நடைபெற்ற 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சி. சுதர்ஷினி என்ற மாணவி 173 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் ஒன்பதாவது நிலையில் சித்தியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்காலப்பகுதியில் இங்கு கல்வி கற்று 5ந் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களில் ஒருவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வணிகப்பீட இரண்டாம் வருட மாணவராக இருக்கின்றார். மேலும் இருவர் வங்கித்துறையில் வேலை செய்கின்றனர். இன்னும் பலர் ஆசிரிய ஆசிரியர்களாகவும் தொழிற்படுகின்றனர்.

கல்வித்துறையில் புறகிருத்தியச் செயற்பாடுகளான தமிழ் தினம், ஆங்கில தினம் போன்ற போட்டிகளின் போதும் அனேகமான மாணவர்கள் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது. எது எவ்வாறு இருந்த போதிலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு சுற்றுமதில், மலசலகூட வசதிகள், வகுப்பறைகளுக்கு தேவையான தளபாட வசதிகள் முதலியன பூரணப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

**- கதிரவன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை

மக்களின் வாழ்க்கை வளமடைய சான்றோர்கள் பலவகையான அற, நீதி சிந்தனைக் கருத்துக்களை வரப்பிரசாதமாக வழங்கியுள்ளார்கள். அவை அன்று தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்களின் பேச்சு வழக்கிலும் இருந்து வந்துள்ளது. அந்தவகையிலே பழமொழிகள் ஆத்திசூடி, நல்வழி, முதுமொழிக்காஞ்சி, மூதுரை, உலகநீதி ஆகிய அருமையான பொக்கிஷங்களில் நினைவில் நிற்பவை சிலவற்றை நற்சிந்தனையாகத் தொகுத்துள்ளேன்.

## பழமொழிகள்

- **அழுதபிள்ளை பால் குடிக்கும்**
  எப்படியாயினும் தன்னுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளல்
- **ஆழம் அறியாமல் காலை விடாதே**
  ஒரு காரியம் செய்ய முன்பு நன்றாக யோசனை செய்த பின் செய்யவும்
- **இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை**
  மனதினால் எதனையும் திருப்தி கொள்ளல் இயலாது.
- **உப்பிட்டவை உள்ளளவும் நினை**
  சிறு உதவி செய்தாலும் அதை வாழ் நாள் முழுவதும் மறவாதே
- **எட்டாக் கனிக்கு கொட்டாவி விடாதே**
  நமக்குக் கிடைக்காத பொருளுக்காக ஏங்காதே
- **ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
  சிறுவயதில் கற்றுக் கொள்ள முடியாது போயின் வளர்ந்தபின் கற்க முடியாது
- **கழுதைக்கத் தெரியுமா கற்பூர வாசனை?**
  ஒன்றைப்பற்றி அறியாமல் இருந்தால் அதனை புரியாமல் போய்விடும்.
- **காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்**
  முன்னேற சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனைப் பயன்படுத்திக் கொள்.
- **சிறுதுளி பெரு வெள்ளம்**
  சிறிதாக சேமித்தால் பெரிய தொகை கிடைக்கும்.
- **தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்**
  சிறுவயதில் பழகும் பழக்கம் கடைசிவரை நிலைக்கும்
- **மின்னுவதெல்லாம் பொன்னல்ல**
  பார்வைக்கு அழகாக தெரிவதெல்லாம் உண்மையான அழகல்ல
- **யானைக்கும் அடி சறுக்கும்**
  எப்படிப்பட்டவராயினும் அவரும் தவறு செய்திருப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வளரும் பயிரை முளையில் தெரியும்
  சிறு வயதில் ஒருவரின் செயலைப்பார்த்தால் அவர் எப்படிப்பட்டவர் என்பதை சொல்லி விடலாம்.
- ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது
  வாய் வார்த்தையால் எதையும் செய்ய முடியாது
- விழலுக்கு இறைத்த நீர் போல
  அறிவற்றவர்களுக்கு எதைச் சொன்னாலும் பிரயோசனம் இல்லை.

## ஆத்திசூடி

- மீதூண் விரும்பேல்
  அதிகமாக உண்ண ஆசைப்படாதே
- வைகறைத்துயில் எழு
  அதிகாலையில் நித்திரை விட்டெழு
- நூல்பல கல்
  அறிவுள்ள நூல்களைப்படி
- செய்வன திருந்தச் செய்
  செய்யும் காரியங்களை நன்றாகச் செய்
- மருந்தே ஆயினும் விருந்தோடுண்
  தேவா அமிர்தமேயானாலும் மற்றவருடன் பகிர்ந்து சாப்பிடு
- கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி
  அரசன் என்றாலும் துன்பப்பட்டவருக்கு சென்று உதவி செய்ய வேண்டும்.

## நல்வழி

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர் வேண்டா "நமக்கும் வழியே நாம் போம் அளவும் எமக்கு என்" என்று இட்டு உண்டு இரும்.

இறந்து போனவர்களை நினைத்து அழுவதால் என்ன பயன் மாண்டவர் மீண்டு வரமாட்டார் நமக்கும் ஒருநாள் மரணம் ஏற்படும் என்று நினைத்து தருமம் செய்து வாழுங்கள்.

## முதுமொழிக் காஞ்சி

- காதலில் சிறந்ததன்று கண்ணஞ்சப்படுதல்
  பிறரால் அன்பு செய்யப்படுதலைக் காட்டிலும் தன் செயல்களினால் அவர் மதிக்கும் படி நடப்பது மேலானது
- வண்மையில் சிறந்தன்று வாய்மையுடைமை
  வளமான செல்வ வாழ்வைவிட உண்மை வாழ்வே மேலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துரை

**"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரம் – சபை நடுவே**
**நீட்டு ஓலை வாசியான் நின்றான்**
**குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்"**

கொம்பும் கிளையும் விட்டு காட்டிலே நிற்கின்ற மரம் நல்ல மரம் அல்ல நாலுபேர் கூடிய சபையிலே நீட்டிய ஓலையை வாசிக்க முடியாமல் நிற்கின்றானே அவனே நல்ல மரமாவான்

## உலக நீதி

- **ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்**
  **ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்**
- **மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்**
  **வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்**
- **போகாத இடந்தனிலே போக வேண்டாம்**
  **போகவிட்டு புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்**
- **வாகாரும் குறவருடைய வள்ளி பங்கன்**
  **மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே**

ஒவ்வொரு நாளும் படிக்க வேண்டும். எவர் மீதும் அவதூறு சொல்லக்கூடாது பெற்ற தாயை மறக்கலாகாது கெட்டவர் சிநேகம் கூடாது. தகாத இடங்களுக்குப் போகாதே. கண்டு புகழ்ந்து காணாது இகழாதே குறவர் குடியில் பிறந்த வள்ளி மணாளனை மனமார வாழ்த்து நெஞ்சே.

இவ்வாறாக வையகத்தில் சிறப்பாக வாழ்வதற்குரிய கருத்துப் பொதிந்த படைப்புக்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

**விஸ்வப்பிரம்மஸ்ரீ நா.ஜீவன் பூசகர் (J.P)**
**ஸ்ரீ சந்தி மகாமாரியம்மன் ஆலயம்**
**தட்டார் தெரு, தாழங்குடா – 03**

**"கதிரவன்" பற்றிய வாசகர்களின் கருத்துக்கள், விமர்சனங்கள், வளர்ச்சிக்கான ஆலோசனைகள், இதழில் இடம்பெறும் கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன.**
**அனுப்பவேண்டிய முகவரி**
**ஆசிரியர், கதிரவன், கதிரவனின் வாசகர், புதுக்குடியிருப்பு –EP, மட்டக்களப்பு,இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா.சதாசிவம் (J.P)

# வழமான வாழ்வு

வாழ்க்கையே ஒரு சுமையாகக் கருதுபவர்கள். சோர்வுடன் வாழ்பவர்கள், சலித்துக்கொள்பவர்கள், அலுத்துக் கொள்பவர்கள் என்ற நிலையில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தப் பரிதாபகரமான நிலை எதிர்மறை எண்ணங்களுக்கு உள்ளத்தில் இடம் கொடுப்பதால் ஏற்படுகின்றது.

இந்த அவலம் அகன்று மனிதன் உண்மையான ஆனந்தமான வாழ்க்கை வாழ்வதற்கு ஆக்கபூர்வமான சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதே ஆகும்.

உண்மையே பேசு, நல்லவனாக இரு, நல்லதையே பார் என்றெல்லாம் சொல்வது ஆக்கபூர்வமான சிந்தனை, பொய்பேசாதே, கெட்டவனாகாதே, கெட்டதைப் பார்க்காதே என்றெல்லாம் சொல்வது எதிர்மறையான சிந்தனை.

பிறரைத் திட்டி வேலை வாங்குவது என்பது ஒரு முறை இது எதிர்மறையானது. திட்டிக் கொடுத்து வேலை வாங்குவதை விட தட்டிக்கொடுத்து வேலை வாங்கவேண்டும். இதுவே ஆக்க வழியில் அமைந்த முறையாகும்.

"இறைவா என்னைப் பாவங்களிலிருந்து விடுவித்து விடு" என்று கேட்பதைவிட "இறைவா என்னை தெய்வீக எண்ணங்களால் நிரப்பு என்று பிராத்திப்போம்."

எதிர்மறைச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளும் மனிதனின் உடலும் உள்ளமும் பலவீனமடைகின்றன. ஆரோக்கியத்தை இழக்கின்றன. எதிர்மறை சிந்தனைகளை உடைய மனிதனுக்கு உலகம் துன்பம் நிறைந்ததாக இருக்கும்.

ஆக்கவழியில் சிந்தித்துப் பழகியவனுக்கு உலகம் இன்பமானதாக இருக்கும்.

இதற்கு உதாரண புருஷர் பாரதியார் அடுத்த வேளை சாப்பாட்டுக்கே வழி இல்லாத சூழ் நிலையில் இருந்த போதிலும் கூட எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என்று பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த இலட்சியங்களில் உன்னதமான விஷயங்களில் ஈடுபடுவதற்காக மனிதன் படைக்கப்பட்டிருக்கின்றானேயன்றி அற்ப விடயங்களில் ஈடுபடுவதற்காகவில்லை.

மனத்தூய்மை கொண்டவனால் தான், ஆக்கவழியில் சிந்திப்பவனால் தான் வாழ்க்கையில் மகிழ்ச்சியுடன் வாழமுடியும்.

எனவேதான் மனதைத் தூய்மைப் படுத்திக்கொள், மனதைத் தூய்மைப் படுத்திக்கொள் என்று திரும்பத் திரும்ப ஆன்மீக நூல்கள் அறிவுரை கூறுகின்றன.

பணம், பொருளை அடைய நாம் என்ன படாதபாடு படுகின்றோம் அந்த அளவுக்கு உள்ளத்தைப் பண்படுத்த நாம் முயற்சி செய்வதில்லை.

மனம் வளம் பெற வேண்டும். மனிதப்பண்புகள் மலர்ச்சி பெறவேண்டும். வாழ்க்கை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தப்படவேண்டும். இதற்கு அறமும், ஆன்மீகமும் சார்ந்த ஆன்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள் மக்களுக்கு படிப்பினைகளைத் தருகின்றன.

மனிதனின் சிந்தனைகளை நெறிப்படுத்துவதில் ஆன்மீகத்துக்கும், நீதி இலக்கியத்துக்கும் முக்கிய பங்குண்டு. உண்மையான தெய்வபக்தி மன அமைதியைக் கட்டாயம் தரும், ஏற்படுத்தும் சமுதாயக்கொடுமைகள், பிரச்சினைகள், தொல்லைகள், அமைதியின்மை ஆகியவை மனிதனைச் சூழ் நின்று தாக்குகின்றன. இதிலிருந்து விடுபட வேண்டுமானால் நாம் அறிவை வளக்கவும் அறியாமையை நீக்கவும் ஆக்கவழிகளில் சிந்திக்கவும் கற்கவேண்டும்.

## சிரிக்கச் சில



காதலன் : உயிரே! என்ட காதல உங்கட அம்மாட்ட சொல்லப்போறன்

காதலி : ஏன் என்னோட விருப்பமில்லையா?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலமை பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக**
**கதிரவனின் கரத்திலிருந்து - புலமைத்தேர்வு - பகுதி - I**

01. இலங்கையின் தேசிய விளையாட்டு
    1. கால்பந்து 2.கரப்பந்து 3.வலைப்பந்து

02. இயற்கைப் பசளை
    1. யூரியா 2. அமோனியா 3. ஆட்டெரு

03. வித்தியாசமான உருவின் கீழ் கோடிடுக
    1.  2.  3. 

4.  இப்படத்தை தசமத்தில் குறித்தால்
    1. 0.3 2. 0.5 3. 0.4

5. ஓடுதல் என்பதை ஆங்கிலத்தில் எழுதினால்
    1. Come 2. Run 3. Go

6. Tree என்னும் ஆங்கில சொல் குறிப்பது
    1. தேயிலை 2. மரம் 3. மூன்று

7. படம் குறித்து நிற்பது 
    1. Fish 2. Food 3. Fruit

8. "நகிடின்ன" என்னும் சிங்கள சொல் குறிப்பது
    1. வாருங்கள் 2. இருங்கள் 3. எழும்புங்கள்

9. சின்னத்தம்பி என்பதை சிங்களத்தில் எவ்வாறு கூறுவர்.
    1. புஞ்சி மல்லி 2. புஞ்சி 3. லஸ்ஸணமல்லி

10. முறத்தைப் போன்ற காதுடன் முகத்தில ஒற்றைக் கையுடன் முன்னும் பின்னும் அசைந்து வருவேன் நான் யார்?
    1. யானை 2. குதிரை 3. பன்றி

11. நீரின் திண்ம நிலை எது?
    1. பனிக்கட்டி 2. சோடா 3. நீராவி

12. அரச இலட்சனையில் காணப்படாதது
    1. நிறைகலசம் 2. சூரியன் சந்திரன் 3. வெள்ளரசயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தொண்ணூறை பிரித்தெழுதினால்

1. ஒன்பது + நூறு 2. ஒன்பது + பத்து 3. தொன்மை + நூறு

14. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது

1. பரிசு 2. தண்டனை 3. தீர்ப்பு

15. 80ம் ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா

1. முத்து/பவளவிழா 2. மணி/வைரவிழா 3. அமுதவிழா

16. கண்ணால் பார்க்கவும் கைகளால் பிடிக்கவும் முடியாதவன் நான் எனக்கு உருவமில்லை. ஆனாலும் உயர்வாக உதவுவேன்

1. சூரியன் 2. சந்திரன் 3. காற்று

17. பூரண நிலவு தெரியும் நாள்

1. அமாவாசை 2. பௌர்ணமி 3. அட்டமி

18. முஸ்லிம்களின் வேதநூல் எது?

1. பைபிள் 2. வேதம் 3. திருக்கூர்ஆன்

19. நத்தை முட்டையின் நிறம் யாது?

1. சிவப்பு 2. மஞ்சள் 3. பச்சை

20. ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் பரிசு

1. தங்கப்பதக்கம் 2. வெள்ளிப்பதக்கம் 3. வெண்கலப்பதக்கம்

**"வானத்தில் எழில் அணங்கு அவள் வண்ணதீபம் ஏற்றுகிறாள்"**

21. இதில் வந்த "எழில் அணங்கு" என்பது

1. அழகானநிலவு 2. அழகான பெண் 3. வண்ணமேனி

22. கீழ்வருவனவற்றில் பொருட் பெயர்ச்சொல் எது?

1. மார்கழி 2. புத்தகம் 3. பாடல்

23. செந்தாமரை என்பதை பிரித்து எழுதினால்

1. சிவப்பு + தாமரை 2. செம் + தாமரை 3. செந்தா + மரை

24. பின்வரும் சொற்களில் சரியாக எழுதப்பட்டது

1. தொலிலாளி 2. தொழிலாளி 3. தொளிலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. செவி சாய்த்தல் எனும் மரபுத் தொடர் குறிப்பது
    1. காதுகேட்டல்  2. சண்டைசெய்தல்  3. கவனாய்கேட்டல்

26. குயில் கூவும் என்பது போல.................. அகவும்
    1. புறா  2. கிளி  3. மயில்

27. நெல், சோளன் என்பவற்றின் விதைகளை
    1. முத்து  2. மணி  3. கொட்டை

28. உதிரம் என்பதின் ஒத்தகருத்துச் சொல்
    1. குருதி  2. வயிறு  3. வியர்வை

29. வீரன் என்பதன் எதிர் கருத்துச் சொல்
    1. வீரி  2. கோழை  3. ஏழை

30. வெள்ளைக் கொக்கு கொழுத்த மீனை கொத்திப்பிடித்தது. இதில் வந்த எழுவாய் அடைமொழி
    1. வெள்ளை  2. கொழுத்த  3. கொத்தி

**பின்வரும் வினாக்களில் அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.**

31. 1,3,5,7, ........
32. 2,3,5,8,12, .......
33. 241,412,365,653,726, .......
34. 110, 1110, 11110, ........
35. 1,3,9,27, .........

**ஆங்கில எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**

36. A,C,E,G, ..........
37. AZ,BY,CX, .........

38.




39.

| | | |
|---|---|---|
| A | D | G |
| E | I | M |
| F | K | ____ |

40.




ப.சசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரவன் கட்டண விபரம் : (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| ஓராண்டுக் கட்டணம் | 240/- | 150/- | US$ 10 |

## 2010ம் ஆண்டு விளம்பரக்கட்டணம்

| | | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | முழு | 4000/- | 1500/- | US$40 |
| பின் அட்டை வெளிப்புறம் | அரை | 2500/- | 900/- | US$25 |
| முன்அட்டை உட்புறம் | முழு | 3000/- | 1000/- | US$30 |
| முன்அட்டை உட்புறம் | அரை | 2000/- | 750/- | US$20 |
| பின் அட்டை உட்புறம் | முழு | 2500/- | 900/- | US$25 |
| பின் அட்டை உட்புறம் | அரை | 1500/- | 500/- | US$15 |
| உட்பகுதிகள் | முழு | 2000/- | 750/- | US$20 |
| உட்பகுதிகள் | அரை | 1000/- | 350/- | US$10 |

## அன்பளிப்பு

**அன்பளிப்பு செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பிய தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.**

வங்கி :- இலங்கை வங்கி, காத்தான்குடி.

கணக்கு இல :- 8725117 (சேமிப்புக்கணக்கு, KATHIRAVAN ARTS CLUB)

காசுக்கட்டளை :- உப அஞ்சல் அலுவலகம், புதுக்குடியிருப்பு E.P (த.இன்பராசா)

## புலமைத்தேர்வு பகுதி - 01

**விடைகளை எழுதி அனுப்புங்கள்**

**(முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கல்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | .................. | 11 | .................. | 21 | .................. | 31 | .................. |
| 02 | .................. | 12 | .................. | 22 | .................. | 32 | .................. |
| 03 | .................. | 13 | .................. | 23 | .................. | 33 | .................. |
| 04 | .................. | 14 | .................. | 24 | .................. | 34 | .................. |
| 05 | .................. | 15 | .................. | 25 | .................. | 35 | .................. |
| 06 | .................. | 16 | .................. | 26 | .................. | 36 | .................. |
| 07 | .................. | 17 | .................. | 27 | .................. | 37 | .................. |
| 08 | .................. | 18 | .................. | 28 | .................. | 38 | .................. |
| 09 | .................. | 19 | .................. | 29 | .................. | 39 | .................. |
| 10 | .................. | 20 | .................. | 30 | .................. | 40 | .................. |

**முகவரி**

ஆசிரியர்
கதிரவன்
கதிரவன் புலமைத்தேர்வு - 01
புதுக்குடியிருப்பு - EP
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவன் சிறப்புடைய வாழ்த்துக்கள்....



தரமான புகைப்படங்களை பெற்றுக்கொள்ள

USHAS Studio



ஸ்ரீ முருகன் கோயில் வீதி,
புதுக்குடியிருப்பு – 5
உரிமையாளர் - சிவா

தொ.பே : 0774816729

RAVI MOTORS



அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களுக்குமான
Mechanical Service & Repairing, body Washing, Painting
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

பிரதானவீதி,
புதுக்குடியிருப்பு – 04

தொ.பே : 07715372219

# கதிரவன் புலமைத்தேர்வு - 01

பெயர் :- ..........................................................................................

முகவரி :- ..........................................................................................

..........................................................................................

பாடசாலையின் பெயர் :- ..........................................................................................

..........................................................................................

இப்பகுதியை வெட்டி விடைகளை எழுதி, கடித உறைக்குள் வைத்து அனுப்பவும் (ஆ-ர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




" கதிரவன் சிறப்படைய வாழ்த்துக்கள் "

# விஷ்வப்பிரம்மா பொன் அகம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுப்பதுடன் பழைய தங்கம் வெள்ளி நியாயமான விலையில் வாங்கப்படும்.




உரிமையாளர் :- மூர்த்தி - தட்டார் தெரு
தாழங்குடா-03
தொ.பேசி-0776529929

# - வர்ஷா மோட்டர்ஸ் - TVS

TVS மோட்டார் சைக்கிள் இலவச சேவை முகவர் மற்றும் அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களுக்குமான machanical service & repaaring body washing painting என்பன மிக சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்

# - VARSHAA MOTORS -

இங்கு அனைத்து மோட்டார் சைக்கிள்களும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதான வீதி
ஆரையம்பதி - 02

தொ.பேசி - 0655681454 , 077689349.

" கதிரவன் சிறப்படைய வாழ்த்துக்கள் "

மட்டு நகரில் ......

# ராஜாஸ் புத்தக நிலையம்

111 , பிரதான வீதி , மட்டக்களப்பு - 065-2222371


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் கோணர்

## INDIAN CORNER




நவீன, சகல விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் ஆண் பெண் இருபாலாருக்குமான நவீனரகஆடைகள், கூறைப்பட்டுச்சாரிகள் ,சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து வகையான ஆடைகளையும் பெற்றுக்கொள்வதற்கான ஒரே ஸ்தாபனம்

தொ.பேசி-0652655878 : 0776448327

இந்தியன் கோணர்,
இல-104,பிரதான வீதி,
காத்தான்குடி.

இல 104 ☆ பிரதான வீதி ☆ காத்தான்குடி ☆

**கதிரவன் சஞ்சிகைக்கு தகுதியான ஆக்கங்கள், மற்றும் விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org